RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 12 யூலை 2024 இதழ்:- 07

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!




வாசகர்களே! கருணையாளர்களே! மறவாதீர்கள்! இன்னும் 2 வாரங்களில் 28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குச் சரியாக ஆரம்பமாகும். தயவு செய்து உங்கள் வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

## ஆறு திருமுருகனுக்கு அவதூறு பரப்பிய உதயன் பத்திரிகைக்கு கிடைத்த சவுக்கடி




உங்களை எப்படி விளித்து இக் கடிதத்தை ஆரம்பிப்பது என்று எனக்குப் புரியவில்லை. ஒரு காலத்தில் நீங்கள் எங்களின் நெருங்கிய நண்பராக இருந்தவர் தான் என்றாலும். இப்போது உங்களை நண்பர் என்று விளித்து எழுத என் உள்ளம் மறுத்து நிற்கிறது. காரணம். இப்போது நீங்கள் எங்களுக்கு மட்டும் அல்ல எவருக்குமே உண்மையான நண்பராக இல்லை என்பது தான்!.நீங்கள் எப்படியும் இருந்து விட்டுப் போங்கள்! நான் எங்களின் (6ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## சாவகச்சேரி மக்கள் போராட்டம் ஒரு அறச் சீற்றம்!

இலவசக் கல்வி இலவச மருத்துவம் என்பன இலங்கை மக்களுக்கு கிடைத்த உரிமைகள்......வரப்பிரசாதங்கள்..... இந்த இலவசக் கல்வியினால். மருத்துவத்தினால் கல்வியை ஆரோக்கியத்தைப் பெற்று உயர் கல்வி வரை பணம் ஏதும் செலுத்தாது தமக்கான சமூகத்திற்கான முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்தனர். அரசு உதவிப் பணம் என்பதாக கல்வி (19ம் பக்கம் பார்க்க)



## இலங்கைத் தமிழர் அரசியலில் சம்பந்தரின் வகிபாகம்



## சம்பந்தரைத் தோற்கடித்தவர்கள்

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

## www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Neilson/Tapscott

**Scarborough** **$475,000**
Bedrooms: 2 Washrooms: 2
close to the Hwy 401 and the TTC

### Corner Park St. N & Dalhousie

**Peterborough** **$549,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Great Opportunity for Investors


### McCowan Rd & HWY 401


**Scarborough** **$699,999**
Bedrooms: 3 Washrooms: 2
Luxurious Penthouse Condo


### Lawrence /Morningside

**Scarborough** **$425,000**
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony


### HWY 48 & High Street


**Georgina** **$774,900**
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Never Lived Homes

### Church St N & Rossland Rd W

**Ajax** **$950,000**
Bedrooms: 3 Washrooms: 3
Upgraded Hardwood Floor

### Taunton/Garden

**Whitby** **$969,000**
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home

### Midland Ave/ Eglinton Ave

**Scarborough** **$1,150,000**
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway


### Dundas / Henry

**Whitby** **$999,000**
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

### Dorian Drive & Christine Elliot


**Whitby** **$ 2000**
Bedrooms: 2 Washrooms: 1
Brand New Basement Unit

### Ninth line and 14th Ave


**Markham** **$1,950**
Bedrooms: 2 Washrooms: 1
Newly Renovated

### Warden / Finch


**Scarborough** **$2,700**
Bedrooms: 3 Washrooms: 2
Corner Unit In A High Demand Area

*Looking for more house?*

## www.AgentSiva.com

**WILL BRING THE BEST RESULTS!**

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# பிரிட்டன் பாராளுமன்றத்திற்குள் நுழையும் முதல் ஈழத்தமிழ் பெண் உமா குமரன்

பிரிட்டனில் ஜீலை 4ஆம் திகதி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார் இலங்கைத் தமிழ் பூர்வீகத்தைக் கொண்ட உமா குமரன். இந்தத் தேர்தலில் லேபர் கட்சி பெரு வெற்றி பெற்று 14 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் தலைநகர் லண்டனில் பல்வேறு சமூகங்கள் செறிந்து வாழும் ஸ்ட்ராட்ஃபோர்ட் அண்ட் போ (Stratford and Bow) என்ற புதிய தொகுதியில் ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களைக் கணிசமான வாக்குகள் வித்தியாசத்தில் உமா குமரன் தோற்கடித்துள்ளார்.

உமா குமரனின் பெற்றோர், இலங்கையில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக 1980களில் அங்கிருந்து வெளியேறி லண்டனில் குடியேறியவர்கள். 36 வயதான உமா குமரன், லண்டன் குயின்மேரி பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் அரசியல் சிறப்பு இளங்கலைப் பட்டப்படிப்பையும் பொதுக் கொள்கை முதுகலைப் பட்டப் படிப்பையும் கற்றுள்ளார்.

இங்கிலாந்தின் தேசிய சுகாதாரத்துறை ஊழியராக (NHS) தொழில் வாழ்க்கையைத் தொடங்கிய உமா, இளவயதிலேயே லேபர் கட்சி மூலம் அரசியலில் நுழைந்தார்.

அந்தக் கட்சியின் பல்வேறு தளங்களிலும் பல பொறுப்புக்களை வகித்துள்ள அவர், லண்டன் மாநகர மேயர் சாதிக் கானின் மூத்த ஆலோசகராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

சுமார் 100 உலக நகரங்கள் அங்கம் வகிக்கும் ‘C40 Cities Climate Leadership Group' என்ற பருவநிலை மாற்றம் தொடர்பான குழுவின் ஊடாக ஐ.நா. உள்ளிட்டப் பல்வேறு பன்னாட்டுத் தளங்களிலும் பணியாற்றியுள்ள உமா, லண்டன் மாநாகரின் சில உள்ளூராட்சி மன்றங்களிலும் லேபர் கட்சியின் ஆலோசனைப் பீடத்தில் முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார்.

வடமேற்கு லண்டனின் ஹரோ பகுதியில் இரண்டு வெவ்வேறு தொகுதிகளில் 2010, 2015–ஆம் ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்களில் போட்டியிட்ட போதிலும் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

லேபர் கட்சித் தலைவர் கியர் ஸ்டாமரின் கீழ் சில முக்கிய அரசியல் பொறுப்புகளை வகித்திருந்த உமா, கிழக்கு லண்டனில் புதிதாக உருவாக்கப்பட்ட Stratford and Bow தொகுதியில் போட்டியிட்டு அந்தத் தொகுதியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக இம்முறை தெரிவாகியுள்ளார்.

இலங்கையில் இருந்து போர்ச் சூழ்நிலை காரணமாக புலம் பெயர்ந்த தமிழர்களில் பலரும், அவர்களின் பிள்ளைகளும் பிரிட்டனில் வணிகம், மருத்துவம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற நிலையில், நாடாளுமன்ற உறுப்பினராக ஒருவர் வெற்றி பெறுவது இதுவே முதல் முறை.



இம்முறை வெற்றிபெற்றுள்ள 263 பெண்களில் இளவயது உறுப்பினர்களில் ஒருவராக உமா குமரனும் இடம்பிடித்துள்ளார் எனது பெற்றோர் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் இருந்து தப்பி வந்தவர்கள்... எனது குடும்பமும் எம்மைப் போன்ற ஏனையவர்களும் இன்று வரை அந்தப் போரின் வடுக்களுடேனேயே வாழ்கின்றோம்,'' என்று தமது அதிகாரபூர்வ இணையதளத்தில் கூறியுள்ளார் உமா குமரன்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் 650 உறுப்பினர்கள் கொண்ட பொதுமக்கள் அவையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை அதிக பெண்கள் தெரிவாகியுள்ளனர்.

இம்முறை வெற்றி பெற்றுள்ள 263 பெண்களில் இளவயது உறுப்பினர்களில் ஒருவராக உமா குமரனும் இடம் பிடித்துள்ளார். (2019–ஆம் ஆண்டு தேர்தலில் 220 பெண்கள் வெற்றி பெற்றிருந்தனர்.)

இம்முறை நாடாளுமன்றம் செல்லும் 335 புதிய முகங்களில் ஒருவரான உமா, இனச் சிறுபான்மை பின்புலத்தைக் கொண்ட 90 உறுப்பினர்களின் பட்டியலிலும் இடம் பிடித்துள்ளார்.

உமா குமரனின் வெற்றிக்கு அவரது ஆதரவாளர்களைத் தாண்டி, பெருமளவிலான தமிழர்கள் உலகம் எங்கிலும் இருந்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ’உமா குமரன் தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்,’ என அவரது ஓ தளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

’தமிழ் அகதிகளின் பிள்ளை நான். பாரபட்சத்தையும் ஒடுக்குமுறையையும் அனுபவித்த ஒரு சமூகத்தின் பிள்ளை நான். நியாயத்துக்காக நான் எப்போதும் போராடுவேன்,’ என்று தனது தேர்தல் வெற்றி உரையின் போது கூறினார் உமா குமரன்

நன்றி:– பிபிசி

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# ரணில் செயலில் காண்பிப்பாரா?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரின் இறுதி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கு கொண்டிருந்தார். சம்பந்தன் ஒரு போதும் நாட்டை துண்டாக்கும் முயற்சியை ஆதரித்தவரல்ல என்று குறிப்பிட்டதுடன் கூடவே, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை ஒருபுறமாக வைத்து விட்டு, ஏனையவற்றை அமுல் படுத்துவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் ரணில் முன்னரும் பேசியிருக்கின்றார்.

ரணில் கூறுவது உண்மையென்று எவ்வாறு ஒருவர் நம்பமுடியும்? ரணில் தற்போது நிறைவேற்று அதிகாரமுள்ள ஒரு ஜனாதிபதி. அவரால் பல விடயங்களை செய்ய முடியும். ஆனால், அவர் எதனையும் செய்யவில்லை. சம்பந்தனுக்கான அஞ்சலி உரையில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசும் ரணில் எதற்காக ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டு வர முடியுமென்னும் நம்பிக்கையை சம்பந்தனுக்கு வழங்க வேண்டும்?

ரணில் மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசித்தானே ஒட்டு மொத்த தமிழ் மக்களும் ஏமாற்றப்பட்டனர். அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதன் ஊடாகத்தான் அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல முடியும் அது தான் அரசாங்கத்தின் திட்டம் என்றால் எதற்காக புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்டது? ரணில் மைத்திரி ஆட்சிக் காலத்தில் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலாக அமுல்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தது.

பாராளுமன்ற பலத்தைக் கொண்டு சாதாரணமாக அதனைச் செய்திருக்க முடியும். ஆனால், அது பற்றி ஒரு சிறு உரையாடல் கூட நடை பெறவில்லை ஏன்? இது யாருடைய தவறு? கூட்டமைப்பின் தவறா அல்லது புதிய அரசியல் யாப்புக்கான அரசியல் சூழல் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டே ரணில் தரப்பு சம்பந்தனை ஏமாற்றியதா? ரணில் இன்று கூறும் விட யங்களின் அடிப்படையில் தான் இவ்வாறானதொரு கேள்வியை கேட்க வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கான வியூகங்களை வகுத்து வரும் ரணில் விக்கிரமசிங்க தற்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசுகின்றார் அப்போதும் கூட மிகவும் கவனமாக பொலிஸ் அதிகாரம் இல்லாத அமுலாக்கம் தொடர்பிலேயே பேசுகின்றார். (18ம்பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544





காருறழ் வெய்ய களிற்றிடையாகிப்
பாரிட எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்

# கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம்

# Analaitivu Iyanar Temple of Canada

22 Goodmark Place, Unit #13, Etobicoke, Ont M9W 6R2 Tel : (416) 679-9899

## குரோதி வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்
## 12-07-2024 முதல் 24-07-2024 வரை

ஐயன் மெய்யடியார்களே !
நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆனித்திங்கள் 30ம் நாள் 13.07.2024 சனிக்கிழமை பூர்வ பட்ச அட்டமி திதியும் சித்திரை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அருள்மிகு கனடிய அனலைதீவு ஸ்ரீ பூரணை புட்கலை அம்பாள் சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் பெருமானுக்கு பகல் 11:35 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

## மஹோற்சவ கால நிகழ்வுகள்

| திருவிழா | திகதி | கிழமை | உற்சவ விபரம் |
|---|---|---|---|
| | 12.07.2024 | வெள்ளி | மஹோற்சவ கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு புண்யாகவாசனம் அனுக்ஞை மிருத்சங்கிரஹணம் |
| 1ம் நாள் | 13.07.2024 | சனி | காலை துவஜாரோகணம் (கொடியேற்றம்), மாலை உற்சவம் |
| 2ம் நாள் | 14.07.2024 | ஞாயிறு | காலை 1008 சங்காபிஷேகம் உற்சவம், மாலை உற்சவம் |
| 3ம் நாள் | 15.07.2024 | திங்கள் | காலை, மாலை உற்சவம் |
| 4ம் நாள் | 16.07.2024 | செவ்வாய் | காலை, மாலை உற்சவம் |
| 5ம் நாள் | 17.07.2024 | புதன் | காலை, மாலை உற்சவம் |
| 6ம் நாள் | 18.07.2024 | வியாழன் | காலை, மாலை உற்சவம் |
| 7ம் நாள் | 19.07.2024 | வெள்ளி | காலை, மாலை உற்சவம் |
| 8ம் நாள் | 20.07.2024 | சனி | காலை உற்சவம், மாலை (4 மணி) வேட்டைத்திருவிழா, இரவு சப்பறத்திருவிழா |
| 9ம் நாள் | 21.07.2024 | ஞாயிறு | காலை தேர்த்திருவிழா, பச்சை சாத்தி வழிபாடு, பிராயச்சித்த அபிஷேகம் |
| 10ம் நாள் | 22.07.2024 | திங்கள் | காலை தீர்த்தோற்சவம், மாலை துவஜா அவரோஹணம் (கொடியிறக்கம்) |
| 11ம் நாள் | 23.07.2024 | செவ்வாய் | மாலை பூங்காவனம் |
| 12ம் நாள் | 24.07.2024 | புதன் | மாலை பைரவர் மடை |

மஹோற்சவகுரு
ஆகமகலாரத்னம், ஆகமபிரவீணா கிரியா தத்வநிதி, கிரியா பூஷணம் சாதகஸா மணி, அலங்கார பூஷணம்
**ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சந்திரகுமாரக் குருக்கள்**
(ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம் முன்னாள் குருமணி- கொழும்பு)

ஆலய குரு
**ஸ்ரீ நவநீத கிருஷ்ண சர்மா**

### கொடியேற்ற நிகழ்வுகள்

06:00 மணி காலை பூசை
07:00 மணி நவகலச அபிசேகம்
09:00 மணி விசேட பூசை
10:00 மணி வசந்த மண்டப பூசை
11:35 மணி கொடியேற்றம்

### காலை நிகழ்வுகள்

07:00 மணி காலை பூசை
08:00 மணி நவகலச அபிசேகம்
10:00 மணி ஸ்தம்ப பூசை
11:30 மணி வசந்த மண்டப பூசை
01:00 மணி பிரசாதம் வழங்குதல்

### மாலை நிகழ்வுகள்

04:30 மணி உருத்திரகும்ப அபிசேகம்
06:30 மணி விசேட பூசை
07:00 மணி ஸ்தம்ப பூசை
08:00 மணி வசந்த மண்டப பூசை
09:30 மணி பிரசாதம் வழங்குதல்

கற்பூரச்சட்டி, பாற்குடம் மற்றும் நேர்த்திகள் செய்ய விரும்பும் அடியார்கள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்யவும். மேலும் இரவுத்திருவிழாவின் போது தவில், நாதஸ்வர இசைக்கச்சேரி மற்றும் இன்னிசை, பரதநாட்டிய நிகழ்வுகளும் நடைபெறும். மஹோற்சவத்தை சிறப்பிக்க சக ஆலயங்களின் குருமார்கள், ஆலய அறங்காவலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். திருவிழா நாட்களில் தங்களால் இயன்ற பால், தயிர், நெய், பூக்கள், மாலைகள், அன்னதான பொருட்கள் மற்றும் அபிஷேக திரவியங்களை ஆலயத்திற்கு வழங்கி ஐயனார் அருள் பெற வேண்டுகின்றோம்.

குலம் தழைக்க குலதெய்வ வழிபாடு முக்கியம். திருவிழாக் காலங்களில் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

- ஆலய அறங்காவலர் சபை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சாவகச்சேரி வைத்தியசாலையில் நடந்தது என்ன? வெளியேறினார் வைத்தியர் அர்ச்சனா இராமநாதன்



யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலை விடுதியில் இருந்து வெளியேறிச் சென்றார்.

வைத்தியசாலையில் பதில் மருத்துவ அத்தியட்சகராகக் கடமையாற்றும் இராமநாதன் அர்ச்சுனாவை அங்கிருந்து இடமாற்றம் செய்ய உத்தர விடும் சுகாதார அமைச்சகத்தின் கடிதம் கடந்த 07 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை இரவு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சமன் பத்திரண பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவிடம் வழங்க முற்பட்ட போது அதனை ஏற்க மறுத்துள்ள வைத்திய அத்தியட்சகர், இது அலுவலக நேரம் அல்ல என தெரிவித்துள்ளார்.

அதேவேளை வைத்தியரை இடமாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாக ஞாயிறு இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் மறுநாள் திங்கட்கிழமை அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் நண்பகல் வரையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக சாவகச்சேரி நகர்ப்பகுதிகளில் கடைகள், பொதுச்சந்தை மூடப்பட்டது.

இதேவேளை வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா பொதுமக்கள் வெளியே போக சொல்லாமல் நான் வெளியேற மாட்டேன் என தெரிவித்து வைத்தியசாலையில் தொடர்ந்து திங்கள் நண்பகல் வரையில் தங்கியிருந்த நிலையில் நீண்ட இழுபறியில் பின்னர் நண்பகலுடன் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி சென்றுள்ளார்.

வைத்தியர் வெளியேறி சென்றதுடன் மக்கள் போராட்டமும் நிறைவுக்கு வந்தது. அதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகரை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளிகளை விட்டு ஓடிய வைத்தியர்களை எவ்வாறு நம்புவது? போராட்டத்தில் ஈடுபட்ட பெண் கேள்வி!



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களை கருத்தில் கொள்ளாது தமது சுகபோகங்களை அனுபவிப்பதற்காக வைத்தியசாலையை விட்டு ஓடிச் சென்ற வைத்தியர்களை எவ்வாறு மக்கள் நம்புவது என போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

08 யூலை 2024 திங்கட்கிழமை சாவச்சேரி ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் அர்ச்சுனாவை மாற்றக்கூடாது மற்றும் வைத்தியசாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர், தமது சிறிய வயது காலத்தில் இருந்து இந்த வைத்தியசாலையை பயன்படுத்தி வருகிறோம்.

இங்கு வைத்தியர்கள் சுமார் 20க்கும் மேற்பட்டவர்கள் இருப்பது தற்போதைய வைத்தியர் அர்சுனா வெளிப்படுத்தியதன் மூலம் நாம் அறிந்து கொண்டோம்.

நாங்கள் சிகிச்சைக்கு வரும் போது வைத்தியர் இல்லை என பல முறை திரும்பிச் சென்றிருக்கின்றோம் ஆனால் இங்கு இருபதுக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இருக்கும் விடயம் தற்போது தான் எமது மக்களுக்கு தெரிய வந்தது.

இங்கு கடமையாற்றும் வைத்தியர்கள் பலர் வைத்தியசாலைக்கு வராது வீடுகளிலும் தனியார் வைத்திய சாலைகளிலும் கடமையாற்றுவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் சிலர் கடவுளுக்கு நிகராக வைத்திய துறையை கருதி சேவை செய்து வரும் நிலையில் சிலர் அவர்களையும் குழப்பி தமது நிகழ்ச்சி நிரலின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று நாட்களாக வைத்தியர்கள் குறித்த வைத்தியசாலையை விட்டு வெளியேறச் சென்று இருக்கிறார்கள் அவர்களுடன் வைத்தியசாலையை விட்டுச் செல்ல விருப்பமில்லாத வைத்தியர்களும் நிர்பந்தத்தின் அடிப்படையில் சென்றிருப்பதை நான் அறிகிறோம்.

வைத்தியர் ஒருவர் வைத்தியசாலையில் நடக்கும் முறைகேடுகள் தொடர்பில் வெளிப்படுத்தியதற்காக ஏழை நோயாளிகளை கைவிட்டு விட்டு சென்ற வைத்தியர்கள் தமது பிள்ளை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டால் போராட்டம் என கூறி வெளியேறிச் செல்வீர்களா என குறித்த பெண் கேள்வி எழுப்பினார்.

# தனது ஊழலை மறைக்க வைத்தியர்களைத் தூண்டி விடும் சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்காக தென்மராட்சி மக்களால் முன்னெடுத்த போராட்டத்தை குழப்பம் வகையில் வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரை யாழ்ப்பாண பிராந்திக்க சுகாதார பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தூண்டி விட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது யாழ் பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் மீது சாவகச்சேரியின் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்தியர் அர்சுனா பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வரும் நிலையில் அவரை அகற்றுவதன் மூலம் தனது ஊழல் மோசடிகளை மறைப்பதற்காக வைத்திய அதிகாரிகள் சங்கத்தை தூண்டி விடுவதாக வைத்தியத்துறை சார்ந்தவர்கள் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்தியசாலைகளின் செயற்பாடுகளை ஸ்தம்பிக்கச் செய்யும் நோக்கில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

## வடக்கின் வைத்தியத்துறை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை மையப்படுத்தி வெளி வரும் தகவல்கள் வடக்கு மாகாண வைத்தியத்துறையின் மீது மட்டுமல்ல ஒட்டுமொத்த வைத்தியத் துறையின் மீதான மக்கள் நம்பிக்கையை கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஒரு வைத்தியரின் குற்றச்சாட்டும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுவரும் உரையாடல்களும் வடக்கின் ஒட்டுமொத்த வைத்தியத்துறையின் மீது விரல் நீட்டுகின்றது. அனைத்து வைத்தியர்களையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றது.

குறிப்பாக அரசாங்க வைத்தியசாலைகள் திட்டமிட்டு முடக்கப்பட்டு தனியார் வைத்தியத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில் விடயங்கள் இடம் பெறுவதாக வெளிவரும் தகவல்களில் உண்மையிருக்கின்றதா அல்லது அவைகள் பொய்யான குற்றச்சாட்டுக்களா? இதற்கு ஆம் என்றோ அல்லது இல்லையென்றோ எவரும் பதிலளித்து விட முடியாது

ஆனால் வடக்கின் ஆளுநர் உள்ளடங்கலாக, பிராந்திய சுகாதார பணிப்பாளர், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே இது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்களாவர். ஏனெனில் வைத்தியத் துறையின் மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே சுகாதாரத் துறையில் ஊழல் இடம் பெற்றதான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிறையிலடைக்கப்பட்டிருக்கின்றார். அது தொடர்பான விசாரணைகளில் மருந்து கொள்வனவில் ஊழல்கள் இடம் பெற்றிருப்பது அம்பலமாகியிருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் வடக்கின் ஒட்டுமொத்த சுகாதார துறையின் மீதும் வைத்தியர்கள் மீதும் மக்கள் விரல் நீட்டக் கூடியவாறான நிலைமை உருவாகியிருக்கின்றது.

இது ஆரோக்கியமானதல்ல. சமூக ஊடகங்களில் வெளிவருபவை அனைத்தும் உண்மைகள் என்றில்லை ஆனால் சமூக ஊடகங்கள் அதிகம் பொது மக்களை பாதிக்கக் கூடியதாக இருப்பதால் இது போன்ற குற்றச்சாட்டுக்கள் வெளிவரும் போது தொடர்புடைய அதிகாரிகள் குற்றச்சாட்டுக்களை சாதாரணமாக தட்டிக் கழித்து விட்டும் செல்ல முடியாது — செல்லக் கூடாது.

வைத்தியத் துறை ஒரு புறம் உன்னதமான சேவையாக இருந்தாலும் கூட இன்னொரு புறம் அதிக பணம் அள்ளும் துறையாகவும் இருக்கின்றது. நோய்களிலிருந்து விரைவாக குணமடைய வேண்டும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை வேண்டும் இப்படியான பல காரணங்களால் பலரும் தனியார் வைத்தியசாலைகளை நாடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு அதற்கான வசதியுண்டு ஆனால், பெரும்பான்மையான ஏழை மக்களுக்கு அரசாங்க வைத்தியசாலைகளை ஒன்றே நோய்கள் தீர்க்கும் ஆலயங்களாகும். ஏழைகளுக்கோ அங்குள்ள வைத்தியர்கள் கடவுகள் போன்றவர்கள்.

எனவே அரசாங்கம் ஏழை மக்கள் வைத்தியசாலைகள் மீது நம்பிக்கையிழக்கும் அல்லது கோபம் கொள்ளும் வகையிலான விடயங்கள் இடம் பெறுவதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. சுகாதார அமைச்சு மற்றும் வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இந்த விடயத்திற்கு பின்னாலுள்ள உண்மைகள் அல்லது பொய்கள் இரண்டையும் ஆராய வேண்டும். பொறுப்பற்று இருத்தல் சரியல்ல.

மாதம் இருமுறை வெளியாகும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
26 யூலை 2024
வெள்ளிக்கிழமை
அச்சுப் பத்திரிகையாக
அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்




திரு ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கட்கு- நிர்வாக இயக்குனர்,

உதயன் பத்திரிகை- யாழ்ப்பாணம்.

08.06.2024

உங்களை எப்படி விளித்து இக் கடிதத்தை ஆரம்பிப்பது என்று எனக்குப் புரியவில்லை. ஒரு காலத்தில் நீங்கள் எங்களின் நெருங்கிய நண்பராக இருந்தவர்தான் என்றாலும், இப்போது உங்களை நண்பர் என்று விளித்து எழுத என் உள்ளம் மறுத்து நிற்கிறது. காரணம், இப்போது நீங்கள் எங்களுக்கு மட்டும் அல்ல எவருக்குமே உண்மையான நண்பராக இல்லை என்பது தான்!.

நீங்கள் எப்படியும் இருந்து விட்டுப் போங்கள்! நான் எங்களின் பழைய நட்பை நினைந்து உங்களை இடித்துரைப்பதற்காகவே இக் கடிதத்தை எழுதத் தொடங்குகிறேன்.

எனது இந்த முயற்சியால், எந்தப்பயனும் விளையப் போவதில்லை என, என் அறிவுக்குத் தெரிந்தாலும், என் கடமையாய் நினைந்து பயனை எதிர்பாராமல் இக் கடிதத்தைப் பொது வெளியில் எழுதுகிறேன். வயதும், அனுபவமும் காலப்போக்கில் பலரையும் வலிமைப் படுத்தும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவை உங்களை வலிமைப்படுத்துவதற்குப் பதிலாக வக்கிரப்படுத்தி வருவதாகவே தோன்றுகிறது. அந்த எனது முடிவின் கடைசிச் சான்றாக, கடந்த 04.07.2024 ஆம் திகதி உங்களது உதயன் பத்திரிகையில் வந்திருந்த தலைப்புச் செய்தி அமைந்து போயிற்று.

அச் செய்தியைக் கண்டு மற்றைய தமிழர்களைப் போலவே நானும் பேரதிர்ச்சி அடைந்தேன். கடந்த தினங்களில் பயணம் ஒன்றில் இருந்ததால், உடன் எழுத நினைத்த கடிதத்தை, இப்பொழுதான் எழுத முடிகிறது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களையும், அவர் நடாத்தி வரும் மகளிர் இல்லத்தினையும், இழிவு செய்யும் நோக்கத்தோடு அச் செய்தி திட்டமிட்டு வெளியிடப்பட்டிருந்தது. ஆறு.திருமுருகன் அவர்களைப் பற்றியும், அவரது சமய, சமூக, தமிழ்ப் பணிகள் பற்றியும் நான் சொல்லித்தான் உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்று அவசியமில்லை. தனி ஒரு மனிதாக நின்று, தன் சுயமுயற்சியால் அவர் செய்து வரும் அளப்பெரும் பணிகளை எடுத்துரைப்பதானால், இக் கட்டுரை பல பக்கங்களாக நீண்டு விடும் என்பதால், எல்லோருக்கும் தெரிந்த அந்த விடயங்களை இங்கு மீளவும் வரிசைப்படுத்தாமல் விட்டு விடுகிறேன்.

சுருங்கச் சொல்வதானால், பாராளுமன்ற உறுப்பினர்களாய் இருந்த உங்களைப் போன்றவர்கள், அரச நிதியில் சமூகத்திற்காகச் செய்த பணிகளைவிடப் பலமடங்கு பணிகளை ஆறு.திருமுருகன் நம்மினத்திற்காகச் செய்திருக்கிறார். தெல்லிப்பழை துர்க்கை யம்மன் ஆலயத்தில் தொடங்கிய அவரது பணிகள், பின்னர் யாழ்ப்பாணம் அளவாய் விரிந்து, இன்று இலங்கை பூராகவும் பரவியிருக்கிறது. இந்த உண்மையைச் சாதாரண ஒரு தமிழ்ப் பாமரனும் அறிந்துள்ள நிலையில், பத்திரிகைத் துறை சார்ந்த உங்களுக்கு அவரது பெருமை தெரியாமல்ப் போனது ஆச்சரியம் தருகிறது.

ஆறு.திருமுருகனின் பெயரை வலிந்து இணைத்தும், அவரது தனி ஒழுக்கம் பற்றி மற்றவர்களுக்கு ஐயம் ஏற்படும் வகையிலும், மிகக் கொடூரமான வக்கிரத்துடன், உறுதிப்படுத்தப்படாத செய்தி ஒன்றை வேண்டுமென்றே திட்டமிட்டு வெளியிட்டிருந்தீர்கள்.

சமூகத்தின் முக்கியமான ஒருவர் பற்றிய உறுதிப்படுத்தப் படாத செய்தியை, தலைப்புச் செய்தியாக இடுமளவிற்குத்தான், உங்களது பத்திரிகைத்துறை அனுபவம் இருக்கிறதா? என நினைந்து ஆச்சரியப்படுகிறேன். பத்திரிகையை நீங்கள் சமூக வளர்ச்சிக்காக அன்றி உங்களின் வளர்ச்சிக்காகவே நடாத்தி வருகிறீர்கள். சமூகமா?, வீடா? என்ற ஓர் நிலை வந்தால் சமூகத்தைத் தூக்கிக் குப்பைக்கூடையில் போட்டு விட்டு வீட்டை வளர்க்கத் துணிபவர் நீங்கள். உங்களின் இந்தச் சுய உருவம் இன்னும் பலருக்குத் தெரியவில்லை.

நீங்கள் வெளியிட்ட ஆறு.திருமுருகன் பற்றிய வக்கிரச் செய்திக்குப் பின்னாலும் கூட, வீட்டை வளர்க்கும் உங்களது சுயநலம் பதிவாகியிருப்பதை நான் அறிவேன்.

போர்க் காலத்தில், டாக்டர் யோகு பசுபதி அவர்களின் பலகோடி பெறுமதியான இல்லத்தை, இயக்கங்களிடம் இருந்து காப்பாற்றித் தருகிறேன் எனக் கூறி, வாடகைக்கு எடுத்த நீங்கள், போர் முடிந்த பின்பு அவரது வாரிசுகள் அவ் வீட்டு உரிமையை மீளக் கேட்ட போது, அதனை அவர்களிடம் கொடுக்காமல் அச் சொத்தை விழுங்கிவிட முற்பட்டீர்கள்.

ஒன்றும் செய்ய முடியாத அக்குடும்பத்தினர், அந்த வீட்டை அறப்பணிகளுக்கு எனத் திருமுருகனின் சிவபூமி அறக்கட்டளைக்கென எழுதிக் கொடுத்து விட, (18ம் பக்கம் பார்க்க)

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவர் குமார் இரத்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்தி

கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக பொறுப்பேற்றுக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 2009 முதல் நான் பேரவையின் உறுப்பினராகவும் தன்னார்வத் தொண்டராகவும் இருந்து வருவதில் பெருமை யடைந்து, எமது சமூகத்தில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்திய பல வெற்றிகளுக்கு சாட்சியாகவும் பங்களித்துமிருக்கின்றேன்.

இருப்பினும், எமது பேரவை சமீபத்தில் சில சவால்களை எதிர் கொண்டிருந்தது. செயல்திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் வலுவான குரலின் தேவை பற்றிய உங்கள் கருத்துக்களை நான் புரிந்து கொண்டிருக்கின்றேன். வெளிப்படைத் தன்மை, ஒத்துழைப்பு மற்றும் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டங்களால் கட்டமைக்கப்படவுள்ள புதிய நாளையை வழி நடத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

உங்கள் குரலை அனைவரும் கேட்கச் செய்வது: அதிக செயல் திறனுக்கான குழுச் செயல்பாடுகளுக்கு அதிகாரமளிப்பதன் மூலம், கனடா, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்களின் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பாக மாறுவோம்.



வெளிப்படைத்தன்மையை பேணுதல்: எங்களின் புதுப்பிக்கப்பட்ட இணையதளம், சமூக ஊடகம் மற்றும் புதிய மின்னஞ்சல் செய்தி மடல் மூலம் அனைத்து தகவல்களும் சிறந்த முறையில் அனைவருக்கும் தெரிவிக்கப்படும். கூடுதலாக, மெய்நிகர் கருத்து பரிமாற்ற சந்திப்புக்கள் மற்றும் ஆய்வுகள் மூலம் அனைவரது கருத்துக்களும் கருத்தில் கொள்ளப்படும்.

நிலையான வாய்ப்புகளை உருவாக்குதல்: எங்கள் சமூகத்திற்கான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் முதலீட்டை உறுதி செய்து, வலுவான ஆதார உத்திகளை உருவாக்க, கூட்டாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவோம். உறுப்பினர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடு: உடனுக்குடனான தகவல் பரிமாற்றங்கள் மூலம் அனைத்து பேரவையின் முன்முயற்சிகள், அதன் ஆணைகள் மற்றும் செயற்திட்டங்கள் யாவும் அனைத்து அங்கத்தவர்களுக்கு முறையாக தெரிவிக்கப்படுவதை உறுதி செய்வோம்.

உங்கள் குரலைப் பகிர்ந்து கொள்ளுங்கள்: கருத்து மன்றங்கள், இணையத்தள விவாதங்கள் மற்றும் கருத்துக்கணிப்புகளில் பங்கேற்கவும். உங்கள் திறமைகளை எமது சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளுங்கள்: எங்கள் சமூக செயற்திட்டங்களில் உற்சாகமான தன்னார்வ வாய்ப்புகளை நாங்கள் வழங்குவுள்ளோம்.

இந்த பயணத்தில் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். ஏதேனும் ஐயப்பாடுகள் இருந்தால் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு பதில்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தனது செய்தியில் கனடிய தமிழர் பேரவை புதிய தலைவர் குமார் இரத்தினம் மேலும் தெரிவித்துள்ளார்

# கைலாசா நாடு எங்கேயுள்ளது? 24ம்திகதி தெரிய வரும்

கைலாசா இருக்கும் இடம் பற்றிய தகவல்களை வெளியிடவுள்ளதாக நித்தியானந்தா அறிவிப் பொன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து தப்பிச் சென்று கைலாசா என்ற தனி நாட்டை உருவாக்கி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். மேலும், கைலாசா நாட்டு ஐக்கியநாடுகள் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் கூறியிருந்தார்கள். நித்தியானந்தா பெயரை எடுத்தாலே சர்ச்சையான செய்திகளே பரவி வருகின்ற நிலையில், கைலாசா இருக்கும் இடத்தை எதிர்வரும் 21ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக அவரின் உத்தியோகப்பூர்வ இணையத்தில் வெளியிட்டிருக்கிறார்.

மேலும், எதிர்வரும் 21ஆம் திகதி குருபூர்ணிமா நன்னாளில் கைலாசா இருக்கும் இடம் அறிவிக்கப் படுமெனவும் உங்களை அன்போடு வரவேற்கிறோம் எனவும் ஒரு பதிவும் வெளியிடப்பட்டுள்ளது. காத்திருங்கள் 24 யூலை 2024 வரை.

# 1வது ஆண்டு நினைவஞ்சலி



சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

**திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம்**

அன்னை மடியில் 17 ஜனவரி 1924

ஆண்டவன் அடியில் 07 யூலை 2023

நீங்கா நினைவுகளை மட்டும் - எங்கள்
நெஞ்சோடு தந்து விட்டு
அரன் திருவடி சென்று
ஆண்டு ஒன்று சென்றதுவோ தந்தையே!
உங்கள் இழப்பு வார்த்தைகளால்
சொல்ல முடியாத வலிகள்! - எங்கள்
உள்ளம் தேடுகின்றது
உங்கள் நினைவுகளைத் தேடி
எங்கள் தந்தையே! ஆசானே!
ஆறாது அழுது தீர்த்தாலும்
ஆறாது உங்கள் பிரிவு!
உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில் நிம்மதியாய் - நித்தியமாய் நீடு துயில் கொள்ள இரு கை கூப்பி இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரை அனுதினமும் நினைவுகூரும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# ஒன்றாறியோ அரசில் இளம் ஈழத்தமிழ் தலைமைத்துவத்தின் பிரதிநிதித்துவம்




அண்மையில் நடந்த ஒன்றாறியோ அமைச்சரவை மாற்றத்தில் போக்குவரத்துத்துறை இணை அமைச்சராக இருந்த விஜய் தணிகாசலம் அவர்கள் குடியிருப்பு வசதித்துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அமைச்சரவையிலுள்ள இளவயது உறுப்பினர்களில் ஒருவர் என்பதுடன், ஒன்றாறியோவின் முதல் தமிழ் அமைச்சருமாவார். இது மாநிலத்தின் ஆற்றல் மிக்க இளம் தலைமைத்துவத்துக்கான எடுத்துக்காட்டாகும்.

இவ்வேளையில் ஜீன் 27 அன்று தலைமைப் பணியாளர்களின் மாற்றங்களின் போது சரண்யா நீலானந்தசிவம் குடியிருப்புவசதித்துறை இணை அமைச்சகத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவில் பிறந்த திறமைமிக்க இளம் ஈழத் தமிழரான சரண்யாவுக்கு முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களால் நேரடியாக வழங்கப்பட இந்நியமன மானது அவரின் சாதனைகளையும் இளம் ஈழத் தமிழ்த் தலைமைத்துவத்தின் வளர்ச்சியையும் எடுத்தியம்புகிறது.

சரண்யா உலக வரலாறு மற்றும் சமத்துவம் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பை முடித்துள்ளதுடன் சமூகத்தில் கல்விச் செயற்பாட்டிலும் கவனம் செலுத்தி வந்துள்ளார். இவர் முன்னர் கனடிய தமிழ் இளையோர் ஒன்றியத்தின் (CTYA) கலை மற்றும் கலாசார பேரவையின் இயக்குநராகவும் பணியாற்றியிருந்தார்.

தாயகத்திலும் புலம்பெயர்ந்த தேசங்களிலும் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே உள்ளவிடத்து இந்நியமனங்களானது துறைசார் சாதனைகளாக மட்டுமல்ல அவை தமிழர்களின் முன்னேற்றத்தினதும் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்குமான குறியீடாகவும் பார்க்கப்படுகிறது. ஒரு சமூகமாக, இளையவர்கள் தலைமையேற்று எமது குரல்கள் ஒலிக்கவும், வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் தமிழர்களாகிய நாம் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும் என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

செல்வி சரண்யா நீலானந்தசிவம் நயினாதீவைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான திரு காரளபிள்ளை அவர்களினதும் யாழ்.மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும் தலைசிறந்த கவிஞருமான திரு நாக.சண்முகநாதபிள்ளை அவர்களினதுத் பேத்தியுமாவார்.

# கண் திறந்த அம்மன் சிலை



முல்லைத்தீவு, முள்ளியவளை கணுக்கேணி பகுதியிலுள்ள பிள்ளையார் கோவில் ஒன்றில், அம்மன் சிலையின் ஒரு கண் திறந்ததாக வெளியாகியுள்ள தகவல் பக்தர்களிடையே ஆச்சர்யத்தை ஏற்படுத்தி யுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக்கேணி பகுதியில் அமைந்துள்ள கற்பக பிள்ளையார் ஆலயத்திலுள்ள அம்மன் சிலையானது வழமையாக மூடிய நிலையிலுள்ள கண்களையுடைய சிலையாகவே காணப்பட்டு வந்தது. தினமும் பக்தர்கள் சென்று வழிபட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் இன்றைய தினம் காலை திடீரென அந்த சிலையிலுள்ள ஒரு கண் திறந்த நிலையிலும் மற்றைய கண் மூடிய நிலையிலும் மாறி, மனித கண்களை ஒத்த நிலையில் தென்பட்டு காணப்படுகின்றது.

# திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினராக சண்முகம் குகதாசன் சத்தியப் பிரமாணம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் 09 யூலை 2024 செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் மறைவை அடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

கதிரவேலு சண்முகம் குகதாசன் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர் கல்வியைப் பெற்றுள்ளார். 1975ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழ் அரசு கட்சியில் உறுப்பினராக இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் கிழக்கு மாகாண அபிவிருத்தி அலுவல்கள் இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும், 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து போட்டியிட்டிருந்தார்.

இரா.சம்பந்தனின் மறைவை அடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு சண்முகம் குகதாசனின் நியமனம் குறித்த வர்த்தமானி அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

கனடாவில் அவர் வாழ்ந்த காலங்களில் தமிழ்க் கற்பிப்பதற்குப் பாடநூல் இன்மை பெரும் சிக்கலாக இருந்ததை உணர்ந்த குகதாசன், இந்த சிக்கலை தீர்க்கும் பொருட்டாக கனேடியக் கல்வி முறைக்கு அமையப் பாட நூல்களையும் பயிற்சி நூல்களையும் எழுதிக் கொடுத்து, கனடாவில் உள்ள தமிழ் பயிற்றுவிக்கும் நிறுவனங்களில் ஆசிரியர் அறிவுரையாளர், விரிவுரையாளர், மற்றும் துறைத் தலைவர் ஆகிய பதவிகளில் பணிபுரிந்து கனேடிய மண்ணில் தமிழ்க் கல்வியை தொடர்ந்தும் ஊக்குவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தரின் இலக்குகளை அடைய அனைவரும் ஒன்றிணைந்து உறுதிபூண்டு செயற்பட வேண்டும்

சம்பந்தனின் இலக்குகளை அடைவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து உறுதிபூ ண்டு செயற்பட வேண்டும் என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

திருகோணமலையில் கடந்த 07 யூலை 2024 நடைபெற்ற மறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களினதும் நாட்டினனும் முக்கியமான தலைவராக இருக்கும் சம்பந்தனின் மறைவால் நாம் கவலை அடைகின்றோம். தனிப்பட்ட முறையில் அவருடைய மறைவானது எனக்கு ஆழ்ந்த கவலைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. அவரை எனக்கு 17 ஆண்டுகளாக நன்கு தெரியும்.

நாங்கள் எப்போதும் அவருடைய கரிசனைகள் மற்றும் ஆலோசனைகளை செவிமடுத்தே வருகின்றோம். அவர் அரசியல் தீர்வு விடயத்தில் எவ்வளவு தூரம் இறுக்கமாக இருந்தாரோ அதேபோன்று தான் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களிலும் தீவிரமான ஆர்வத்தினைக் காண்பித்தார். அவர் வடக்கு, கிழக்குக்கு உட்பட்ட தலைவராக அல்லாது முழு இலங்கைக்கும் அவரது அறிவுரைகளை வழங்கியவராக இருந்தார். அத்துடன் அவருடைய வெற்றிடத்தினை நிரப்புவது மிகவும் கடினமாகும்.

எனினும் அவரது இட்சியங்களை அடைவதற்காக நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று இன் றைய தினத்தில் உறுதி எடுப்பதோடு அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr. 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102 Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% 2%
416-757-0034 - 416-994-3861
105A - 2425 Eglinton Ave. E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment, 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303



தமிழீழத்தின் மூத்த தேசப்பற்றாளர் **தமிழேந்தல் ஈழவேந்தன்** நினைவரங்கில்

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்





# தமிழும் இசையும் இராப்போசன விருந்தும்





## இன்பத் தமிழ்ப் பேச்சு

சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை

## பர்வின் சுல்தானா

நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் சரிகமப புகழ்

## கோபாலகிருஷ்ணன்

கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்

## இன்னிசை மாலை

**யூலை 28, 2024**
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM
**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

**அன்பளிப்பு**
$150 VIP
$100
70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு மட்டும் $75

தொடர்புகளுக்கு-
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

747 AUTOPARTS
Need Auto Parts? Look No Further!
Markham Rd: 905-471-4447
Markham - Heritage Rd: 905-294-5773
Newmarket - Davis Rd: 905-836-7447
Scarborough - Lawrence Ave: 416-285-4447
Scarborough - Milliken Blvd: 416-335-7747
Ajax - Fuller Road: 905-686-4447
www.747autoparts.com

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
iA Financial Group Foresters KABIS

நந்தா NANTHA CATERS
Catering, Bakery & Take Out
Call 416 NANTHA 1 - 416 626 8421

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525
Office: 416.287.2222

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com.
Licenced Funeral Pre-Planner
647-713-6049

TIMES IRON WORKS INC.
Times Metals Sales

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.


அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. ”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 யூன் 2024 – 12 யூலை 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம்

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 10 யூலை 2024 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம்

சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 25 யூன் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா கார்த்திகேசு

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 யூலை 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நடராஜா கார்த்திகேசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசையா மகேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மரூபன் கந்தையா

யாழ்.அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மரூபன் கந்தையா அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 07 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மரூபன் கந்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 09 யூலை 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 யூன் 2024 சனிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 யூன் 2024 சனிக்கிழமை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திருமதி அன்னபூரணம் விநாயகமூர்த்தி அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




30 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திருமதி அன்னபூரணம் விநாயகமூர்த்தி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




30 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திருமதி அன்னபூரணம் விநாயகமூர்த்தி அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





01 யூலை 2024 திங்கட்கிழமை புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 யூலை 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு சாமுவேல் செல்வரத்தினம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சாமுவேல் செல்வரத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




05 யூலை 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





05 யூலை 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 யூலை 2024 வெள்ளிக்கிழமை சுவிஸில் வசிக்கும் திரு வசந்தன் பசுபதிப்பிள்ளை அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




07 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சதானந்தன் செந்தமிழ்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வி மதுரா சதானந்தனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மதுரா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




05 யூலை 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதாகரன் சாமினி இணையர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து 07 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பத்மருபன் கந்தையா அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 யூலை 2024 செவ்வாய்க்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானசேகர் சரோஜினிதேவி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 யூலை 2024 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோத்ஸவ திருநாட்களில் நடைபெறும் விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்

## 14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை

**07.07.2024 ஞாயிற்றுக்கிழமை – சமயதீட்சை**
காலை 7:45 மணி முதல் 11:00 மணி வரை அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை – மாலை**
விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.

**13.07.2024 சனிக்கிழமை**
வாஸ்துசாந்தி நடைபெறும்.

14.07.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி முதல் விக்னேஸ்வரபூஜை, கும்பபூஜை, ஹோமம், அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை. காலை 10:00 மணிக்கு விஷேட பூஜை. காலை 11:00 மணிக்கு வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கணபதிதாளம், வேத, கீத, ஸ்தோத்திர, திருமுறை உபசாரங்கள் தொடர்ந்து நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி, விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் என்பன நடைபெறும்.

**காலை**


| | |
|---|---|
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 10:00 மணிக்கு | விசேடபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் |

**மாலை**


| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 6:00 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கலைநிகழ்ச்சி தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கல் |


கொடியேற்றம்


ஓங்கார வடிவக் காட்சி


மயூரகணபதி வடிவம்


சூரியப் பிரபைக் காட்சி


வித்யாகணபதி வடிவம்


நர்த்தனகணபதி வடிவம்

**14.07.2024 ஞாயிறு – 1ம் நாள்**
ஓங்கார கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**15.07.2024 திங்கள் – 2ம் நாள்**
மயூர கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**16.07.2024 செவ்வாய் – 3ம் நாள்**
சூரியப்பிரபை வடிவக் காட்சி
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**17.07.2024 புதன் – 4ம் நாள்**
வித்யா கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வீணை ஆராதனை

**18.07.2024 வியாழன் – 5ம் நாள்**
அனந்தசயன வடிவக் காட்சி
அந்தணர்களின் வேதபாராயணம்

**19.07.2024 வெள்ளி – 6ம் நாள்**
சிவலிங்கபூஜை வடிவக் காட்சி
கைலாச வாகன அலங்காரக் காட்சி

**20.07.2024 சனி – 7ம் நாள்**
நர்த்தன கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**21.07.2024 ஞாயிறு – 8ம் நாள்**
கப்பல் திருவிழா
கப்பல் வடிவ அலங்காரக் காட்சி

**22.07.2024 திங்கள் – 9ம் நாள்**
சங்கீத கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**23.07.2024 செவ்வாய் – 10ம் நாள்**
திருமஞ்சத் திருக்காட்சி
அழகிய மஞ்ச அலங்காரக் காட்சி

**24.07.2024 புதன் – 11ம் நாள்**
நம்பியாண்டார் நம்பி திருமுறை
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**25.07.2024 வியாழன் – 12ம் நாள்**
மாம்பழத் திருவிழா
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்


**26.07.2024 வெள்ளி – 13ம் நாள்**
சப்பற அலங்காரக் காட்சி
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு

**27.07.2024 சனி – 14ம் நாள்**
தேர் அலங்காரக்காட்சி


**28.07.2024 ஞாயிறு – 15ம் நாள்**
தீர்த்தத் திருநாள்
காலை: விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை
மாலை: திருவூஞ்சல்


**29.07.2024 திங்கள்**
பூங்காவனம்
சங்கீத இசை நிகழ்ச்சி

**30.07.2024 செவ்வாய்**
வைரவர் மடை
காலை: பிராயச்சித்த அபிஷேகம், மாலை: வைரவர் மடை



கைலாச வாகனம்


அனந்தசயனக் காட்சி


மஞ்சத் திருவிழா


சங்கீத கணபதி வடிவம்


சப்பறத் திருவிழா


தேர்த் திருவிழா

விரத காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் அலங்கார உபசார பூஜை வழிபாடுகளில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Aadi Amavasai Viratham**
ஆடி அமாவாசை விரதம்
(பிதிர்தர்ப்பணம்)
03.08.2024 சனிக்கிழமை

**Aadipoora Viratham**
ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா
06.08.2024 வியாழக்கிழமை

**Varaluxmi Viratham**
வரலட்சுமி விரதம்
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
16.08.2024 வெள்ளிக்கிழமை



நம்பியாண்டார் நம்பி உற்சவம்


கப்பல் திருவிழா

## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்


தீர்த்தத் திருவிழா


மாம்பழத் திருவிழா

1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ரொறன்ரோ-கனடா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் கருங்கல் திருக்கோவில்
சங்குஸ்தாபன மஹோற்ஸவம்
அடிக்கல்நாட்டு விழா
JULY 12, வெள்ளி முதல் JULY 28 ஞாயிறு வரை
விநாயகர் ப்ரம்மோற்ஸவ தினங்களில் தினமும்
காலை 11:00 மணிமுதல் 1:00 மணிவரை
ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்குகொள்ளலாம்.
குறிப்பிட்ட தினத்தில் அடியார்கள் பலர் வேலை-பாடசாலை காரணமாகக் குடும்பமாக குழந்தைகளுடன் சேர்ந்து சங்குஸ்தாபன வைபவத்தில் கலந்துகொள்ள முடியவில்லை என்பதாலும், வாழ்நாளில் கிடைக்கப்பெறாத அரிய சந்தர்ப்பத்தில் தமது திருக்கரத்தினால் ஆலயத்திற்கான சங்குகளை ஸ்தாபித்து இச்சிறந்த திருப்பணியில் இணைந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கமைவாகவும் தொடர்ந்து 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகின்ற விநாயகர் மஹோத்ஸவ காலத்தில் தினமும் காலை 11:00 மணிமுதல் 1:00 மணிவரை அடியார்கள் சங்குஸ்தாபன வைபவத்தில் பங்குபற்றுவதற்குரிய ஏற்பாடுகள் ஆலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
அனைவரும் குடும்பசகிதமாக வருகை தந்து சங்குஸ்தாபன அடிக்கல்நாட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்
கருங்கல் திருக்கோவில் ஸ்தபதியார்
"சிற்பக்கலையரசன்" திரு. சரவணமுத்து ஜெயராஜா
"சிற்பக்கலாரத்தினம்" திரு. சக்திவிநாயகம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோற்ஸவ திருநாட்களில் நடைபெறும்
விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்
14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை
தினமும் காலை, மாலை சிறப்பாக நடைபெவுள்ளது.
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
3025 Kennedy Rd, Unit 10,
Scarborough ON M1V1S3
1.416.291.8500
www.vinaayagar.com
vinaayagar

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## குரோதி வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
30-06-2024
ஞாயிறு

**மஞ்சம்**
09-07-2024
செவ்வாய்

**சப்பறம்**
12-07-2024
வெள்ளி

**தேர்**
13-07-2024
சனி

**தீர்த்தம்**
14-07-2024
ஞாயிறு

**பூங்காவனம்**
16-07-2024
செவ்வாய்

அம்பிகை அடியார்களே!

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. குரோதி வருடம் ஆனித் திங்கள் 17ம் நாள் (30-06-2024) அச்சுவினி நட்சத்திரமும், கிருஸ்ணபக்ஷம் தசமித் திதியும் சித்தயோகம் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 31ம் நாள் (14-07-2024) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.ca

# சம்பந்தரைத் தோற்கடித்தவர்கள்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தரின் உடல் வைக்கப்பட்டிருந்த பொழுது நூற்றுக்கணக்கானவர்களே அங்கு வந்து அஞ்சலி செலுத்தினார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள். தமது கட்சியின் முதுபெரும் தலைவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்ட வேண்டும் என்று ஏன் ஏற்பாட்டாளர்கள் சிந்திக்கவில்லை? உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருந்த கட்சிக்காரர்களும் உட்பட ஒரு தொகுதி கட்சித் தொண்டர்களைத் திரட்டியிருந்தாலே அங்கே ஆயிரக்கணக்கானவர்களைக் கொண்டு வந்திருக்கலாம்.

அஞ்சலி நிகழ்வு நடைபெற்ற மண்டபத்துக்கு அருகே யாழ் மத்திய கல்லூரி வழமை போல இயங்கியது. மண்டபத்தில் ஒலித்த சோக கீதத்தைத் தாண்டி பள்ளிக் கூடப் பிள்ளைகளின் இரைச்சல் கேட்டது. யாழ் நகரம் வழமை போல இயங்கியது. கடைகள் பூட்டப்படவில்லை நகரத்தின் விளம்பர ஒலிபெருக்கிகளில் வளமை போல சினிமா பாடல்கள் ஒலித்தன. சோக கீதம் ஒலிக்கவில்லை. நகரத்தில் துக்கத்தின் சாயலைக் காண முடியவில்லை. சம்பந்தரின் பூத உடல் பலாலி விமான நிலையத்திலிருந்து தந்தை செல்வா கலையரங்கை நோக்கி வந்த வழி நெடுக மக்கள் திரண்டு நின்று துக்கத்தை வெளிப்படுத்தவில்லை. அப் பூதவுடலை யாழ்ப்பாணத்திலிருந்து வழியனுப்பி வைத்த பொழுதும் மக்கள் திரண்டு நின்று வணக்கம் செய்யவில்லை.





ஆனால் தந்தை செல்வாவின் பூதவுடல் தெல்லிப்பளையிலிருந்து முற்ற வெளியை நோக்கி வந்த பொழுது வழிநெடுக மக்கள் திரண்டு நின்றார்கள். சில இடங்களில் சில கிலோமீட்டர் தூரம் வரை ஊர்வலம் நீண்டு சென்றதாகத் தகவல். அது ஒரு தேசிய துக்க நிகழ்வாக அனுஷ்டிக்கப்பட்டது. மக்கள் தன்னியல்பாக செல்வாவை தந்தை என்று அழைத்தார்கள். தன்னியல்பாக ஆயிரக்கணக்கில் அவருடைய இறுதி ஊர்வலத்தில் திரண்டார்கள். ஆனால் சம்பந்தருக்கு அது நடக்கவில்லை. ஏன்?

ஈழத் தமிழர்களின் நவீன அரசியலில் மிக நீண்ட காலம், இறக்கும்வரை பதவியில் இருந்த ஒரு தலைவர் அவர். தமிழ் மக்களின் தலைநகரம் என்று வர்ணிக்கப்படுகின்ற திருக்கோணமலையின் பிரதிநிதி. ஆயுதப் போராட்டத்திற்கு முந்திய மிதவாத அரசியல், ஆயுதப் போராட்டம், ஆயுதப் போராட்டத்திற்குப் பிந்திய மிதவாத அரசியல் ஆகிய மூன்று கட்டங்களையும் தொடுக்கும் மூத்த அரசியல்வாதி. எல்லாவற்றையும் விட முக்கியமாக கிழக்கில் இருந்து எழுச்சி பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு மூத்த அரசியல்வாதிக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு அஞ்சலி செய்யாதது ஏன்?

ஏனென்றால், சம்பந்தர் இறக்கும் பொழுது ஏறக்குறைய தோல்வியுற்ற ஒரு தலைவராகவே இறந்தார்.

சிங்கள பௌத்த அரசு கட்டமைப்புக்கு முன்னப்பொழுதையும் விட அதிகம் விட்டுக் கொடுப்பதன் மூலம் ஒரு தீர்வைப் பெறலாம் என்று அவர் கற்பனை செய்தார். அதில் தோல்வியடைந்தார். எனவே அவரை முதலில் தோற்கடித்தது சிங்கள பௌத்த அரசுக்கட்டமைப்புத் தான்.

ஆயுத மோதல்களுக்கு பின்வந்த மிதவாத அரசியலின் தலைவரான அவர் நீட்டிய கரத்தை இறுகப் பற்றிக்கொண்டு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது ஒரு தீர்வைக் கண்டு பிடிக்கத் தயாராக இருந்திருந்தால். சம்பந்தரின் வழி வெற்றி பெற்றிருக்கும். ஆனால் சிங்கள பௌத்த அரச கட்டமைப்பு இராணுவ வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற விரும்பவில்லை. அதைவிட முக்கியமாக அது அரசியல் வெற்றியாக மாற்றப்பட முடியாத ஓர் இனப்படுகொலை. ராஜபக்சக்கள் அந்த வெற்றியை ஒரு கட்சியின் அடித்தளமாக மாற்றினார்கள். அதன் மூலம் யுத்த வெற்றி வாதத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

யுத்த வெற்றிவாதம் எனப்படுவது சம்பந்தருடைய விட்டுக் கொடுக்கும் அரசியலுக்கு எதிரானது. யுத்த வெற்றிவாதமானது தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் பொழுது சம்பந்தர் மட்டும் தனிக்குரலில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் பிரிக்கப்படாத இலங்கைக்குள் பிரிக்கப்பட முடியாத இலங்கைக்குள் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆயுத மோதல்களுக்குப் பின் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கிடைத்த அப்படிப்பட்ட ஒரு தலைவரை சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு உரிய முக்கியத்துவம் கொடுத்து பொருத்தமான விதத்தில் கையாளத் தவறியது. அவருடைய விட்டுக் கொடுப்புகளுக்கு பரிசாக எதிர்க்கட்சித் தலைவரின் வீடு அவர் இறக்கும் வரை வழங்கப்பட்டது. அந்த வீட்டை ஏற்றுக் கொண்டதன் மூலமும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ஸ்தானத்தை இழந்த பின்னரும் அந்த வீட்டை விடாது வைத்துக் கொண்டிருந்ததன் மூலமும் சம்பந்தர் போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்துக்குத் தலைமை தாங்கும் தகுதியைக் குறைத்துக் கொண்டார்.

இப்படிப் பார்த்தால் சம்பந்தரை முதலில் தோற்கடித்தது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு தான்.

இந்த விடயத்தில் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை நம்புமளவுக்கு சம்பந்தர் ஏமாளியாக இருந்தாரா என்ற கேள்வி எழும். அல்லது அவர் தன் சொந்த மக்களின் போருக்கு பின்னரான கூட்டு உளவியலை விளங்கிக் கொள்ள முடியாத ஒரு தலைவராக இருந்தார் என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது விளங்கிக் கொண்ட போதிலும் அதற்கு விரோதமாக செயல்பட்டவர் என்று எடுத்துக் கொள்ளலாமா? அதனால்தான் அவருடைய அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடந்த பொழுது மக்கள் அதற்கு ஆயிரக்கணக்கில் திரண்டு வரவில்லையா?

இரண்டாவதாக, அவரை தோற்கடித்தது, அவருடைய அரசியல் வாரிசுகள். யாரை தன்னுடைய பட்டத்து இளவரசர் போல வளர்த்தாரோ, அவரே சம்பந்தரைக் குறித்து பொதுவெளியில் விமர்சிக்க தொடங்கினார். அவர் மற்றொரு வாரிசாக இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். தனது சொந்த தேர்தல் தொகுதியில், திருக்கோணமலையில் தன்னுடைய வாரிசாக அவர் யாரை இறக்கினாரோ, அவர் தனக்குத் தெரியாமல் நியமனங்களைச் செய்கிறார் என்று புலம்பும் ஒரு நிலைமை ஏற்பட்டது.

அதாவது தன் மிக நீண்ட அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் சம்பந்தர் தனது சொந்தக் கட்சிக்காரர்களாலே மதிக்கப்படவில்லை என்பது தான் உண்மை. குறிப்பாக கடந்த ஜனவரி மாதம் நடந்த கட்சித் தலைவருக்கான தேர்தலின் பின் கட்சி இரண்டாக உடைந்தது. கட்சிக்காரர்களே கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தினார்கள். தனது தாய்க் கட்சி உடைந்த போதும், அந்தக் கட்சியை கட்சிக்காரர்களே நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்திய பொழுதும், அதைத் தடுக்கும் சக்தியற்றவராக, கையாலாகாத ஒரு தலைவராக, சம்மந்தர் காட்சியளித்தார். அதாவது அவருடைய இறுதிக் காலத்தில் அவருடைய கண் முன்னாலேயே அவருடைய தாய்க் கட்சி உடைக்கப்படுவதையும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதையும் கையாலாகாதவராக பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அளவுக்கு அவர் தோற்கடிக்கப்பட்டிருந்தார்.

சம்பந்தரை அவருடைய வாரிசுகளே தோற்கடித்தார்கள். யாழ்ப்பாணத்தில் அவருடைய அஞ்சலி நிகழ்விலும் அவருடைய கட்சிக்காரர்கள் அவரை தோற்கடித்து விட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.


ஓர் அரசியல் தலைவரின் அஞ்சலி நிகழ்வு என்பதும் ஓர் அரசியல் நிகழ்வு தான். அதை அதற்குரிய கால முக்கியத்துவத்தோடு விளங்கி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கட்சிக்காரர்கள் செய்யத் தவறினார்கள்.அ வரைப் பெருந்தலைவர் என்று அழைத்த கட்சிக்காரர்களே அந்த அஞ்சலி நிகழ்வை பிரம்மாண்டமானதாக ஒழுங்குபடுத்தத் தவறினார்கள். அல்லது அவர்களால் அவ்வாறு ஒழுங்குபடுத்த முடியாத அளவுக்கு மக்களின் கூட்டு மனோ நிலை இருந்தது என்று எடுத்துக் கொள்ளலாமா?

அதனால் யாழ்ப்பாணத்தில் அந்த சாவீடு சோர்ந்து போன ஒரு சா வீடாகக் காட்சிளித்தது. யாழ்ப்பாணத்தில், சம்பந்தரின் அஞ்சலி நிகழ்விலும் அவர் தோற்கடிக்கப்பட்டார். அவருடைய வாரிசுகளும் அவருடைய விசுவாசிகளாகத் தங்களைக் காட்டிக்கொண்டவர்களும் அவர் இறந்த பின்னரும் அவரைத் தோற்கடித்து விட்டார்கள் என்று சொல்லலாமா?

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

உ
சிவமயம்



# றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம் கனடா
# Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr. North York, ON M9L, 2A7. Tel : 416-744-9568

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**
**அருள்மிகு றொறன்ரோ திருச்செந்தூர் முருகபெருமாள் மெய்யடியார்களே!**

## அருள்மிகு றொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2024

சகலவளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்ராரியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானுக்கு நிகழும் குரோதி வருடம் ஆடி மாதம் 3ம் திகதி (18.07.2024) வியாழக்கிழமை வளர்பிறை துவாதசி திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமாள் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 18-07-2024 | வியாழக்கிழமை | சப்பறம் | 26-07-2024 | வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 27-07-2024 | சனிக்கிழமை | தீர்த்தம் | 28-07-2024 | ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | 29-07-2024 | திங்கட்கிழமை | வயிரவர் மடை | 30-07-2024 | செவ்வாய்க்கிழமை |

கைலாசவாகனத்திருவிழா 24.07.2024 புதன்கிழமை

### உற்சவகால பூஜை நேரங்கள்

**காலை**
08:00 மணிக்கு ஆலய பூஜை
08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம்
10:00 மணிக்கு ஆலய பூஜை
11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை

**மாலை**
05:30 மணிக்கு அபிஷேகம்
07:00 மணிக்கு ஆலய பூஜை
08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

### மகோற்சவகுருக்கள்
சிவாகம தத்துவநிதி
சிவஸ்ரீ. நாகரட்ன கார்த்திகேயக் குருக்கள்

**சாதகாச்சார்யார்**
வெங்கடரமண சர்மா
கொங்காதர குருக்கள்

**ஆலய பிரதமகுருக்கள்**
சிவாஹம சேகரம்" சிவஸ்ரீ தர்மபிரதீபன் குருக்கள்'
கண்ணன் குருக்கள்

**இணைக்குருமார்கள்**
பிரம்மஸ்ரீ கை. ஸ்ரீ ராகுலன் சர்மா
சிவாச்சார்யா திலகம்.
சிவஸ்ரீ து. ராதாகிருஷ்ணக் குருக்கள்


**ஆலய மங்கள வாத்தியம்**
திரு சிவமயம் குழவினர்
(சிவநாதலயம் கனடா)

**ஆலய ஸ்தபதி**
சிற்பகலைமாமணி விஸ்வபிரம்மஸ்ரீ
செல்வராஜா குணாளன் கனகாலயா சிற்ப்பாலயம் கனடா

# இலங்கைத் தமிழர் அரசியலில் சம்பந்தரின் வகிபாகம்



கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
-வீ.தனபாலசிங்கம் -



இறுதியாக எஞ்சியிருந்த முதுபெரும் இலங்கை தமிழ் அரசியல் தலைவரும் கடந்த வாரம் இவ்வுலகில் இருந்து விடை பெற்று விட்டார். கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலுமாக ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்துக்கு தன்னை அர்ப்பணித்தவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள்.

அவர் மீதான சகல விமர்சனங்களுக்கும் அப்பால், சிங்கள தலைவர்களினதும் சர்வதேச சமூகத்தினதும் மதிப்புக்குரியவராக இறுதிவரை சம்பந்தன் விளங்கினார். அந்த வகையில் எளிதில் நிரப்பமுடியாத ஒரு வெற்றிடத்தை அவரது மறைவு ஏற்படுத்தியிருக்கிறது. அவரது அரசியலை விமர்சிப்பவர்களும் கூட இதை ஏற்றுக்கொள்வார்கள்.

1977 ஜீலை பொதுத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் சார்பாக திருகோணமலை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான சம்பந்தன் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் காலஞ்சென்ற தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் இணைந்து பணியாற்றிய போதிலும், 2001 ஆம் ஆண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக வந்த பின்னரே தமிழர்களின் மிதவாத அரசியலின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டார்.

தாங்களே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று உரிமை கோரிய விடுதலை புலிகளை ஆதரித்த தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் 2009 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு தமிழர் அரசியலின் தலைமைத்துவம் இயல்பாகவே வந்து சேர்ந்தது. புதிய சூழ்நிலைகளின் கீழ் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் வரலாற்று முக்கியத்தவ கடமை கூட்டமைப்புக்கு இருந்தது.

சம்பந்தன் பல தசாப்த கால அரசியல் வாழ்வைக் கொண்டிருந்தாலும், கடந்த 15 வருடகாலமாக அவரின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழர் அரசியல் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வந்தது என்பதே அவரின் அரசியல் மரபாக வரலாற்றில் நினைவு கூரப்படும் என்பதில் சந்தேகமில்லை.

போரின் முடிவுக்கு பின்னரான காலப் பகுதியில் தமிழர் அரசியலை வழி நடத்துவதில் கூட்டமைப்பு கடைப்பிடித்து வந்த கொள்கைகளுக்கும் அணுகுமுறைக்குமான முழுப் பொறுப்பையும் சம்பந்தன் மீது சுமத்திவிட முடியுமா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

விடுதலை புலிகள் இயக்கம் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் அரசியல் சமுதாயம் படுமோசமாகப் பலவீனப்பட்டிருந்த சூழ்நிலைகளின் கீழ் அதுவும் குறிப்பாக போர்வெற்றிக் களிப்பில் குதூகலித்துக் கொண்டிருந்த சிங்கள அரசியல் சமுதாயத்துடனேயே சம்பந்தன் தமிழர் பிரச்சினையைக் கையாள வேண்டியிருந்தது. ஆனால், அவர் தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் பொறுத்தவரை, அடிப்படைக் கோரிக்கைகளில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்யாமல் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அதே வேளை, தமிழ் மக்களின் சமகால நிலையை உணர்ந்தவராக உணர்ச்சி வசமான சுலோகங்களை உயர்த்திப் பிடித்து நடைமுறைச் சாத்தியமற்ற அரசியல் பாதையை காட்டுவதற்கு ஒருபோதும் முயன்றதில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையிலான ஆட்சிமுறையே என்ற நிலைப்பாட்டில் சம்பந்தன் உறுதியாக நின்ற அதேவேளை நிரந்தரத் தீர்வை நோக்கிய பயணத்தில் இடைக்கால ஏற்பாடாக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசாங்கங்களை இடையறாது வலியுறுத்தி வந்தார். சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளின் போதும் தனது இந்த நிலைப்பாட்டை அவர் தெளிவுபடுத்த தவறியதில்லை.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படா விட்டால் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வொன்றைக் கோருவதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்று கூறுவதையும் சம்பந்தன் வழக்கமாகக் கொண்டிருந்தார். மரணமடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் வீரகேசரி வார வெளியீட்டுக்கு வழங்கிய நேர்காணலிலும் அதை அவர் கூறியிருந்தார். அதை எவ்வாறு அடைவது என்பது குறித்து ஏதாவது மூலோபாயம் அவரிடம் இருந்ததா இல்லையா என்பது வேறு விடயம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் விடயத்தில் சம்பந்தன் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் மீது அளவுகடந்த நம்பிக்கையை வைத்திருந்தார். இலங்கை அரசாங்கம் மீது சர்வதேச சமூகம் நெருக்குதலைப் பிரயோகிக்க வேண்டும் என்பதும் அவரது இடையறாத கோரிக்கையாக இருந்து வந்தது.

1987 ஜீலை இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கை காரணமாக இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில் இந்தியாவுக்கு ஒரு பெரிய கடப்பாடு இருக்கிறது என்று இந்திய தலைவர்களையும் இராஜதந்திரிகளையும் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் சம்பந்தன் வலியுறுத்தினார். அதேவேளை சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் அரசியல் தீர்வைக் காண்பது சாத்தியமில்லை என்பதும் அவரின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுடன் ஒப்பிடும் போது சிங்கள சமூகத்தின் கடுமையான வெறுப்புக்கு உள்ளாகாத ஒரு மிதவாத தமிழ்த் தலைவராக சம்பந்தன் இறுதிவரை விளங்கினார். அரசியல் தீர்வைப் பொறுத்தவரை முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார்.

தனது காலத்தில் இனப்பிரச்சினைக்கு பயனுறுதியுடைய அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் சம்பந்தனுக்கு இருந்திருக்கக்கூடும். அவரின் தலைமுறையைச் சேர்ந்த பல தமிழ்த் தலைவர்களைப் போன்றே தமிழ் மக்களுக்கு அமைதியானதும் கௌரவமானதுமான வாழ்வை உறுதி செய்யக் கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லையே என்ற கவலையுடனேயே சம்பந்தனும் இவ்வுலகில் இருந்து விடைபெற்றிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளிலும் வெளியில் அரசாங்க தலைவர்களுடனும் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் சம்பந்தன் இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு பிறகு இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து வரிசைக் கிரமமாக விளக்கம் அளிப்பது சம்பந்தனின் வழக்கமாக இருந்தது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பதவிக் காலத்தில் 1991 ஆண்டில் நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியில் இருந்தபோது 2000 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு யோசனைகள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள், மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை ஆகியவற்றை சம்பந்தன் தவறாது குறிப்பிடுவார்.

சமாதான உடன்படிக்கைக்கு பிறகு மாகாணசபைகள் அமைக்கப்பட்ட பின்னரும் கூட அரசாங்கங்கள் அரசியல் தீர்வை நோக்கிய இந்த செயன்முறைகளை முன்னெடுத்ததன் மூலம் 13 வது திருத்தம் இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு அல்ல என்பதை ஏற்றுக் கொண்டன என்பதை நிரூபிப்பதே அவரின் நோக்கமாக இருந்தது.

ஜனாதிபதிகளுடனும் சிங்கள அரசியல்வாதிகளுடனும் சுமுகமான உறவை சம்பந்தன் கொண்டிருந்தார். இது குறித்து தீவிர தமிழ்த் தேசியவாத சக்திகள் கடுமையான விமர்சனங்களை முன் வைத்தன. ஆனால், அத்தகைய சுமுக உறவைக் கொண்டிருந்தாலும் அந்த சிங்கள தலைவர்களின் தவறுகளை நேரடியாகவே சுட்டிக் காட்டும் துணிச்சல் சம்பந்தனிடம் இருந்தது. அவரது நீண்டகால அரசியல் அனுபவமும் வயது மூப்பும் அதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

மகிந்த ராஜபக்சவின் கட்சி தமிழர் விரோத உணர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் கிளப்பி தமிழர்கள் நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என்று பிரசாரங்களை முன்னெடுத்தது குறித்து அவருக்கு முன்னாலேயே சம்பந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்த கண்டனத்தை அவரின் மறைவுக்கு பின்னர் பல அவதானிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்சவும் அவரது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் செய்து வருகின்ற பிரசாரங்கள் கேடுவிளைவிக்கும் நோக்குடனானவை என்பதை இந்த நாட்டில் உள்ள சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த பிரசாரத்தை பொதுஜன பெரமுனவும் நீங்களும் தொடர்ந்து செய்வீர்களேயானால், தமிழீழம் எமது நடவடிக்கைகளினால் அல்ல உங்களது தாமரை மொட்டில் இருந்து தான் மலரும் என்பதைக் கூறி வைக்க விரும்புகிறேன். உங்களது கட்சியின் சின்னமான தாமரை மொட்டு ஈழமாக மலரும். இறுதியில் அதுவே நடக்கும். தவறான பிரசாரங்களைச் செய்து மலிவான அரசியல் ஆதாயத்தை தேட முயற்சிக்காதீர்கள் என்று சம்பந்தன் சபையில் கூறினார்.

இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக தமிழ்த் தலைவர்கள் இந்திய தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் சம்பந்தன் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பைச் செய்தார். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகிய மூவரையும் கொண்ட குழுவே அந்த பேச்சு வார்த்தைகளை நடத்தியது.

அவர்கள் அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஒரு சந்தர்ப்பத்தில் சம்பந்தன் சம்பந்தப்பட்ட சுவாரஸ்யமான சம்பவம் ஒன்றை கடந்த வாரம் சென்னை இந்து ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் அதன் கொழும்பு செய்தியாளர் மீரா ஸ்ரீனிவாசன் நினைவுபடுத்தினார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மொழி ரீதியான நிலத்தொடர்ச்சி இல்லாதவை என்று ராஜீவ் காந்தியின் விசேட தூதுவர் ரொமேஷ் பண்டாரியை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன நம்ப வைத்திருந்தார் என்று மூன்று தமிழ் தலைவர்களும் அறிந்துகொண்டார்கள்.

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சென்னையில் இருந்த சம்பந்தன் பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்து உண்மை நிலையை விளக்க விரும்பினார். திருச்சிக்கு பிரதமர் வரவிருப்பதாகவும் அவர் டில்லி திரும்பும்

(22ம் பக்கம் பார்க்க)




6ம் பக்கத் தொடர்ச்சி) அச் சொத்தை விழுங்கிவிட நினைத்த உங்களது எண்ணம் கனவாயிற்று. அதன் பின்பும் அச் சொத்தைச் தர மாட்டேன் என்று நீங்கள் பிடிவாதம் பிடிக்க, அண்மையில் தான் திருமுருகன் உங்களுக்குத் தனது சட்டத்தரணி மூலம் நோட்டீஸ் அனுப்பியிருந்தாராம்.

உங்களது சுத்துமாத்து வேலைகளுக்கு அஞ்சாமல் உறுதியாய் நின்ற திருமுருகன் மேல் உங்களுக்கு ஏற்பட்ட கோபமே, இப்போது உங்களது பத்திரிகையின் தலைப்புச் செய்தியாய் வெளிவந்திருக்கிறது.

நண்பரே! உங்கள் பத்திரிகையின் ஊடாக மட்டுமே மக்கள் உலகத்தைப் பார்த்து வந்த காலம் மலையேறி விட்டது. இப்போது இணையத் தளங்களில், நிமிட நேரங்களில் சுடச்சுடச் செய்திகள் பரிமாறப்பட்டு வரும் சூழ்நிலையில், பத்திரிகைகள் எல்லாம் தேவையற்ற விடயங்களாய் அன்றாடம் மாறிவரும் உண்மையை நீங்கள் மறந்து விட்டீர்கள்.

அதனால் தான் அரசியற் தலைவர்கள், சமூகப் பணியாளர்கள், நிறுவனத் தலைவர்கள், பொது நிறுவனங்கள், அறிஞர்கள் எனப் பல தரப்பட்டோரையும் உங்கள் பத்திரிகையின் பொய்ச் செய்திகளால் மிரட்டி, அடிபணிய வைத்துக் கோலோச்சிய காலம் முடிந்து விட்டதை இன்னும் உணராமல் இருக்கிறீர்கள்.

கடந்த காலங்களில், பழிவாங்கும் பொய்மைச் செய்திகளால் மற்றவர்களை வீழ்த்திக் காரியம் சாதித்துப் பழக்கப்பட்ட உங்களுக்கு, ஊடகங்கள் மக்கள் வயப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் இனி அது நடக்காத காரியம் எனும் உண்மை புரியவில்லை. அது புரியாத காரணத்தால் தான், காலாவதி ஆகிவ ிட்ட அதே பழைய அஸ்திரத்தை இன்னும் உங்களது எதிரிகள் மேல் ஏவ முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ஊகத்தின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படாத ஓர் செய்தியைத் தலைப்புச் செய்தியாய் இட்ட நீங்கள், வேண்டுமானால் பலராலும் பேசப்படும் பின்வரும் செய்திகளைக் கூட உங்கள் பத்திரிகையின் தலைப்புச் செய்திகள் ஆக்கலாமே!. உங்களுக்காக அச்செய்திகளைச் சுருக்கித் தருகிறேன்.

• ஷப்றா நிதிநிறுவனம் என்ற ஒன்றை ஆரம்பித்து, ஏழை மக்களின் பணத்தை ஏப்பம் விட்டு, சரவணபவன் வாழ்ந்து வருகிறார் என்பது அச்செய்தியில் ஒன்று.

•தங்களது பெண்பிள்ளைகளின் கல்யாணத்துக்காகச் சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தை ஷப்றா நிறுவனத்தில் இட்ட பலர் அது தொலைந்துபோக, துயரம் தாழாமல் தூக்கிட்டுக் கொண்டார்கள் என்பது மற்றொன்று.

• சரவணபவன், மக்களை ஏமாற்றியதோடு அல்லாமல், ஷப்றா நிதி நிறுவனத்தை ஆரம்பித்துத் தன்னிடம் ஒப்படைத்த, மைத்துனரைக் கூட ஏமாற்றி மொட்டை அடித்து ஊரை விட்டு ஓடச் செய்தார் என்பது இன்னொன்று.

• சரவணபவன், 'உதயன்' என்கின்ற பத்திரிகையை ஆரம்பித்ததன் மூலம், ஊடக அதிகாரத்தைக் கையில் வைத்து, பலரது வாய்களையும் அடைத்து, தன்னைப் பற்றிய இரகசியங்கள் வெளிவராமால் பார்த்துக் கொண்டார் என்பது வேறொன்று.

• சரவணபவன், பத்திரிகைத் துறையில் அனுபவமும், ஆற்றலும் கொண்டிருந்த வித்தியாதரனை, ஆபத்து வரும் போதெல்லாம் தனக்குக் கேடயமாக பயன்படுத்திக் கொண்டார் என்பது மற்றொன்று.

• தன்னை விட்டு வித்தியாதரன் விலகி விடமால் இருப்பதற்காகவும், அவர் ஆற்றலை முழுமையாய் உறிஞ்சிக் கொள்வதற்காகவும், மிகக் கெட்டித்தனமாக அவரது தங்கையையே திருமணம் செய்து, உறவுச் சங்கிலியால் அவரையும் கட்டிப் போட்டார் என்பது இன்னொன்று.

• போர்க்காலத்தில் எல்லாம் வித்தியாதரனை முன் தள்ளி விட்டுப் போர் முடிந்ததும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைச் சரவணபவன் தான் அபகரித்துக் கொண்டார் என்பது வேறொன்று.

•இனத் துரோகிகள் பலர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த அவ்வேளையில், வித்தியாதரனது உறவைப் பயன்படுத்திப் புலிகளை வளைத்துப் போட்டு, சரவணபவன் தப்பித்துக் கொண்டார் என்பது பிறிதொன்று.

•நிதிநிறுவனத்தை மூடிய சரவணபவனுக்கு புதிய பத்திரிகை நிறுவனத்தைத் தொடங்கப் பணம் கிடைத்ததன் மர்மம் என்ன? அப் பணத்தை நிதி நிறுவனத்தால் நஷ்டப்பட்டவர்களுக்கு அவர் ஏன் பகிர்ந்தளிக்கவில்லை? இப்படிப்பட்ட துரோகிகளை புலிகள் மன்னித்தது எப்படி? என்பது வேறொன்று.

• புலிகளின் தலைவர் பிரபாகரனையே உதயன் பத்திரிகைக்கான விளம்பரதாரியாகவும் பயன்படுத்திய மர்மத்தின் பின்னணி என்ன? என்பது மற்றொன்று.

•யாழில் வெளிவந்து கொண்டிருந்த வேறு சில தமிழ்ப் பத்திரிகைகளின் மூடு விழாவிற்கு சரவணபவனே காரணராய் இருந்தார் என்பது இன்னொன்று.

• போர் முடிந்து புலிகள் அழிக்கப்பட்ட பின்பு நடந்த தேர்தலில், தனது பத்திரிகைப் பலத்தைக் காட்டித் தான் கூட்டமைப்புக்குள் தனக்கான ஓர் சீற்றையும் சரவணபவன் பெற்றுக் கொண்டார் என்பது வேறொன்று.

• அக் கட்சிக்கும் சரவணபவன் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை, தனக்குப் பிடிக்காத, தன் அணி சார்ந்த மற்றவர்களைக் கூடத் தோற்கடிப்பதற்குத் தனது பத்திரிகையை அவர் பகிரங்கமாகப் பயன்படுத்தினார் என்பது பிறிதொன்று.

• சிங்களத் தலைவர்களுடனான தொடர்பு சிரச்சேதத்திற்கு உரிய குற்றம் என்னுமாற்போல் எழுதியும், பேசியும் வந்த சரவணபவன், சிங்கள ஜனாதிபதியை அழைத்து, யாழ்ப்பாணத்தில் தனது மகளின் பிறந்த நாளைக் கொண்டாட வைத்தார் என்பது மற்றொன்று.

இப்படியாக ஊகத்தின் அடிப்படையில் இடக் கூடிய இன்னும் பல தலைப்புச் செய்திகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. உங்களைச் சந்திக்க வருகிறவர்களிடம் பத்திரிகைத் தர்மம் பற்றி வகுப்பெடுக்கும் உங்களது பத்திரிகைத் தர்மம், எப்படியானது என்பதை எடுத்தக் காட்ட இரண்டு சம்பவங்களை இங்கு குறிப்பிடவேண்டி உள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் செல்லாமல் விடுவதற்காக, அவர்களை ஏமாற்ற நினைத்து நீங்கள், புரட்டாதிச் சனிக்கு எள் எரிக்கக் கோயிலுக்குப் போகும்படி வெளியிட்ட பத்திரிகைச் செய்தி இன்றும் இளைஞர்களால் நையாண்டியாகப் பேசப்பட்டு வருகிறது.

இவ்வளவும் ஏன்? உங்களை எமது நண்பராக நினைத்திருந்த எங்களுக்குக் கூட நீங்கள் வஞ்சனை செய்யத் தவறவில்லை. கொழும்பில் நாங்கள் ஆலயம் கட்டிய போது அதற்கென நிதியுதவி வழங்க வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வருகையைப் பயன்படுத்தி, அவருக்கு நாங்கள் விலை போய் விட்டதாகச் செய்திகள் வெளியிட்டு, எங்களை இனத் துரோகிகளாக அடையாளப்படுத்த முயன்றீர்கள். அந் நிகழ்வின் உச்சகட்டமாக, டக்ளஸ் அவர்கள் எங்களின் இடத்திற்கு வருகை தந்திருந்த புகைப்படங்களை, உங்கள் பத்திரிகையில் ஒரு பக்கம் நிறைய வெளியிட்டு, அவருக்கு நாங்கள் வாழ்த்துச் சொல்வதாக ஓர் பொய்யான விளம்பரத்தைத் தயாரித்து, அதனை நாங்கள் தான் வெளியிட்டோம் என மக்களை நினைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக அதன்கீழ் கம்பன் குடும்பத்தார் எனப் பெயரிட்டு நீங்கள் செய்த வக்கிர வேலைக்கு நிகரான ஓர் செயலை வேறு எந்தப் பத்திரிகையும் செய்திருக்குமா? என்று தெரியவில்லை. இப்படி வஞ்சகமாக நீங்கள் செய்த திருவிளையாடல்களை இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

உங்களைப் பொறுத்தவரை ஆற்றலாளர்கள் எவரானாலும் அவர்கள் உங்கள் கால்களை நக்கிக் கொண்டு உங்களிற்கு கீழே தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவர்களுக்குத் தேவையானவற்றை அவ்வப் போது பிச்சையாக இட்டுக் கொண்டிருப்பீர்கள். உங்களை மீறி அவர்கள் செயல் படத் தலைப்பட்டால் பின்னர் எந்த வகையிலேனும் அவர்களை வேரறுக்கத்'' தயங்க மாட்டீர்கள். இதுதான் உங்களது பாணி.

நண்பரே! ஒன்றை மறந்து போகாதீர்கள்! சிலரைச் சில பேர் சில காலம் ஏமாற்றலாம். பலரைப் பலபேர் பல காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எக்காலத்திலும் எவராலும் ஏமாற்றிவிட முடியாது!. இவ்வுண்மையை வெகுவிரைவில் நீங்கள் உணரப் போகிறீர்கள். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மீண்டும் தர்மம் வெல்லும் என்றும் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்றும் நம் தமிழ்ப்புலவர்கள் சும்மா சொல்லி விட்டுப் போகவில்லை.

திருமுருகன் மீதான உங்களது பழிவாங்கும் படலத்தில் பொது மக்களுக்குப் பல ஐயங்கள் எழுந்துள்ளன. இரண்டு நிறுவனங்களை மூடும்படி கவர்னர் உத்தரவிட்டதாய் நீங்கள் வெளியிட்ட செய்தியில், திருமுருகனது பெயரையும் அவரது நிறுவனத்தினது பெயரையும் வலிந்து சேர்த்திருக்கும் நீங்கள், மற்றைய நிறுவனத்தின் பெயரையோ, அதை நடத்துபவர்களின் பெயரையோ வெளியிடாமல் விட்டிருப்பது ஏன்? என மக்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இல்லங்களை மூடும் படி கவர்னர் உத்தரவிட்டதாக நீங்கள் வெளியிட்ட செய்தியினை, மறுநாளே கவர்னர் மறுத்திருக்கிறார். அதிலிருந்து அச்செய்தி பொய்ச் செய்தி எனத் தெரியவருகிறது.

முக்கிய பிரமுகர் ஒருவரை இழிவுபடுத்தும் உறுதிப்படுத்தப்படாத ஒரு செய்தியை தலைப்புச் செய்தியாக இட்டிருக்கும் உதயன் பத்திரிகையின் மீது இலங்கையின் ஊடக நிறுவனம் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன? அறிய மக்கள் ஆர்வமாய் இருக்கிறார்கள்.

தான் சொன்னதாக ஓர் பொய்ச் செய்தியை வெளியிட்ட உதயன் பத்திரிகை மீது கவர்னர் இதுவரை எந்தக் கண்டனத்தையும் தெரிவிக்கமாலிருப்பது ஏன்? மக்கள் கேட்டு நிற்கிறார்கள்.

ஒரு வேளை பலரும் சொல்லுமாற் போல் மதம் சார்ந்த ஒரு அரசியலுக்குள் கவர்னர் அகப்பட்டிருக்கிறார் என்பது நிஜம் தானா? இது மக்களின் அடுத்த கேள்வியாய் இருக்கிறது.

திருமுருகனிடம் பல வகையிலும் பயன் பெற்ற பலரும், இன்று அவர் மேல் வீண்பழி சூட்டப்பட்டிருக்கும் நிலையில் மௌனம் காத்து நிற்பது வேதனை தருகிறது.

நம் தமிழ்ச் சமூகம் யார் எதைச் செய்தாலும், வீரமிலா நாய்களாய் நெட்டை மரங்கள் என நின்று புலம்பும் பெட்டைப் புலம்பல் செய்வதை விட வேறெதுவும் செய்ய மாட்டார்கள் என்று நீங்கள் நினைத்து விட்டீர்கள் போல. மக்களின் அமைதி, புயலுக்கு முன் வரும் அமைதி. அதைக் கண்டு நீங்கள் சந்தோசப்படாதீர்கள்.! பின்னால் வரப்போகும் புயலை நீங்கள் தாங்க மாட்டீர்கள்.

இன்று நீங்கள் பத்திரிகை நிறுவனத் தலைவர், சிறந்த வியாபாரி என்ற நிலைகளைத் கடந்து விரும்பியோ, விரும்பாமலோ மக்கள் பிரதிநிதியாகவும் மாறியிருக்கிறீர்கள். அதை நினைந்து நீங்கள் நடப்பதாய்த் தெரியவில்லை. உங்களது கேவலமான செயல்கள் உங்கள் கட்சியையும் பாதிக்கப் போவது நிச்சயம்.

நிறைவாக ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன். திருமுருகனை வீழ்த்தவென நீங்கள் போட்ட சுருக்குக் கயிற்றில் இப்போது உங்களது கால்களே மாட்டிக் கொண்டிருக்கிறன.

அண்மைக் காலமாக வலம்புரியினது எழுச்சியையும், உதயனது வீழ்ச்சியையும் மக்கள் கண்கூடாகக் கண்டு கொண்டு தான் இருக்கிறார்கள். இந் நிலையில் உங்களது இழி செயல்களால் நீங்கள் தொடங்கிய உதயனுக்கு நீங்களே சமாதி கட்டி விடாதீர்கள்! எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இக் கடிதம் உங்களை நிறையக் காயப்படுத்தும் என்பது நிச்சயம். இதிலிருக்கும் செவிகைக்கும் சொற்களை ஏற்றுத் திருந்தினால் அது உங்களுக்கு நல்லது. அதை விடுத்து ஜெயராஜு க்கு எதிராக அடுத்த என்ன சூழ்ச்சி செய்யலாம்? என நினைக்கத் தொடங்குவீர்களே ஆனால், தர்மத்தின் சாட்டையடிக்கு விரைவில் ஆளாவீர்கள் என்பது மட்டும் நிச்சயம்.

-அன்பன், இ.ஜெயராஜ்

# காசைக் காலில் போட்டு மிதித்த தியாகேந்திரனுக்கு எதிராக வழக்கு

ஐந்தாயிரம் ரூபாய் தாள்களை காலில் போட்டு மிதித்த சம்பவம் தொடர்பில் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் தலைவர் வாமதேவா தியாகேந்திரனுக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தியாகி அறக்கொடை நிறுவன தலைவரின் மகளின் பிறந்த தினத்தினை முன்னிட்டு, கடந்த ஜீன் மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள தனது அறக்கட்டளை அலுவலகத்தின் முன்பாக வைத்து வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்கிய போது ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையில் , '

இன்றைக்கு நிவாரணம் பெறுவதற்கு தான் எதிர்பார்த்த மக்கள் வரவில்லை என கூறி தனது சட்டை பையில் இருந்த பெருமளவான ஐந்து ஆயிரம் ரூபாய் தாள்களை எடுத்து நிலத்தில் போட்டு காலால் மிதித்தபடி நின்று கருத்து தெரிவித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகியதை அடுத்து பெருமளவானோர் அதற்கு கடும் எதிர்ப்புக்களை தெரிவிப்பதுடன் கண்டனங்களையும் பதிவு செய்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் தியாகேந்திரனிடம் வாக்குமூலத்தினை பெற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர். . குறித்த வழக்கு விசாரணைக்காக செவ்வாய்க்கிழமை தியாகேந்திரன் நீதிமன்றில் முன்னிலையான போது, ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் அவரை விடுவிக்க மன்று உத்தரவிட்டது .

(3ம் பக்கத் தொடர்ச்சி) ஏனெனில், பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தென்னிலங்கை கடும் போக்கு தரப்புகள் எதிர்ப்புணர்வுடன் இருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு தான் ரணில் பொலிஸ் அதிகாரத்தை ஒரு புறமாக வைப்போம் என்கிறார். ரணில் எதனையும் பேசலாம். ஆனால், அவர் செய்வார் என்பதை மற்றவர்கள் நம்ப வேண்டுமாயின், முதலில் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களை அவர் செயலில் காண்பிக்க வேண்டும்.

# சாவகச்சேரி மக்கள் போராட்டம் ஒரு அறச் சீற்றம்!

இலவசக் கல்வி இலவச மருத்துவம் என்பன இலங்கை மக்களுக்கு கிடை த்த உரிமைகள்......வரப்பிரசாதங்கள்..... இந்த இலவசக் கல்வியினால், மருத்து வத்தினால் கல்வியை ஆரோக்கியத் தைப் பெற்று உயர் கல்வி வரை பணம் ஏதும் செலுத்தாது தமக்கான சமூகத்திற்கான முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்தனர். அரசு உதவிப் பணம் என்பதாக கல்வி பயின்று பட்டதாரிகளாக ஆசிரியர்கள், மருத்துவர், எந்திரவியலாளர்கள் என்றாக பல உயர் நிலையை அடைந்தவர்கள் நாம்.

இலங்கையில் தனியார் கல்வியின் ஆதிக்கம் இன்னும் அதிகம் உச்சம் பெறாத நிலையில் இந்த இலவச கல்வி தான் உயர்கல்வி வரை எம்மை எடுத்துச் சென்று மருத்துவர்களையும், ஆசிரியர்களையும், இன்ன பிற சேவையாளர்களையும் உருவாக்கியது சிறப்பாக மருத்துவத் துறையில் மகப்பேறு என்பது அரசு மருத்துவ மனையில் அதிகம் தங்கியிருக்கும் வாழ்கை முறை தான் எம்முடையது. அந்த வகையில் எம் ஒவவொருவரதும் இந்தப் பூமிக்கான வருகை எம் தாயின் கருவறையில் இருந்து இலவசக் மருத்து உரிமைகளினால் தான் எமக்கு கிடைக்கப் பெற்றது. எமக்கு உயிர் கொடுக்கும் ஜனனத்தின் ஆரம்பமே இங்கு தான் ஆரம்பமாகின்றது.

சிறு காய்ச்சல், தலையிடி, காயம் என்ப தாக கிராமங்களை அண்டி உள்ள தனி ஒருவரின் மருந்தகங்களில் சிறிய தொகை வழங்கி ஆரோக்கியத்தை பெற்ற கைராசி வைத்தியர்களை கொண்ட சமூகத்தில் கல்வியிலும் மருத்துவத்திலும் அறம் சார்ந்த செயற்பாடுகளை அதிகம் கொண்ட சமூகமாகவே எம் சமூகம் இருந்து வந்திருக்கின்றது.

இந்த நடைமுறை இன்றும் பல இடங்களில் செயற்பாட்டிலும் உண்டு. இதனால் தான் மருத்துவர்களையும், ஆசிரியர்களையும், கிராம சேவையாளர்களையும் இன்ன பிற சேவையாளர்களையும் இந்த சமூகம் பல தருணங்களில் தாம் நம்பும் தெய்வங்களாக போற்றினர். இது படிப்படியாக எப்போது அதிக மாற்றம் அடையத் தொடங்கியது....?

கொழும்பை மையப்படுத்தி அப்பலோ என்ற தனியார் மருத்துவமனை 50 வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்டதோ..... சென்றர் நேசிங் கோம் (தற்போதைய நொதேன்) என்று திருநெல்வேலியில் உருவானதோ அன்று தான் இந்த மருத்துவத் துறையில் பணத்தின் ஆதிகம் உயிர்களின் விலையாக அதிகம் பேசப்படத் தொடங்கியது.

அரசு மருத்துவமனைகளில் கிடைக்காத சில சிகிக்சைகளை நாம் வழங்குகின்றோம் அதுவம் துரிதமாக என்றாக ஆரம்பிக்கப்பட்டு இலட்சங்களை பண வசூல் செய்து வைத்தியம் பார்த்தார்களே அன்று பணக்காரர்கள் மட்டும் இங்கு சிகிச்சை பெறுதல் என்பதாக ஆரம்பித்து யுத்த காலத்தில் அதிகம் இடம் பெயர்ந்த புலம் பெயர் தேசத்து டாலர்களின் வருகை இந்த தனியார் மருத்துமனைகளை அதிகம் உருவாக்கவும் அங்கு சென்று சிகிச்சை பெறுதல் என்பதாகவும் அதற் கான பண அறவிடுதல் டாலர் சிந்தனையில் இருந்து உருவானதன் வெளிப்பாடுகளின் தொடர்ச்சியை நாம் எடுத்தும் நோக்க வேண்டும்.

அரச மருத்துவமனையில் பெயருக்கு வேலை செய்தல் என்பதாக சொல்லிக் கொண்டு தமது பிரதான கவனத்தை இந்த தனியார் நிறுவனங்களில் மருத்துவமனைகளில் இந்த மருத்துவ சேவையாளர்கள் அதிகம் கவனம் செலுத்துவதற்கு அவர்களை இழுத்தும் சென்றது.

'....உயிரைக் காப்பாற்றுங்கள் ஐயா..' என்ற கதறுலுக்கு '....காசை முதலில் கட்டுங்கள் முயற்சிக்கின்றோம்....' என்பதான பதில்கள் அதிகம் அப்போது தான் ஆரம்பமானது அந்தக் காலத்து ஆனைப்பந்திகளும் கங்காதரன்களும் ஏன் நாட்டு வைத்தியங்களும் மனிதாபிமானங்களை அதிகம் கடைப்பிடித்த தாக அறிய முடிகின்றது. இந்தக் காலத்து காந்தநேசன்களும் இவ்வாறு செயற்படுவதாக அறிய முடிகின்றது

புலம் பெயர் தேசத்து நிதி உதவிகளும் அரசின் உலகளாவிய தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப அரச மருத்துவமனைகளின் வளர்ச்சியும் மருத்துமனைகளின் தரங்களை உயர்த்தி வசதிகளை ஏற்படுத்தியதும் இங்கு நடந்து தான் இருக்கின்றது.

இதனோடு சேர்ந்து தனியார் மருத்துவமனைகள் அளவிற்கு பணம் பண்ணும் மருத்துவர்களும் அதுவும் இலவசக் கல்வியைப் பெற்று மக்கள் பணத்தில் படித்து விட்டு அதனை வேலைகள் அதிகம் செய்யாது கையூடாக தனக்கு சாதகமான தனியார் மருத்துவமனையிற்கு வாருங்கள் என்பதான அழைப்புகள் அங்கு மருந்துகளை அரசினர் மருந்தகங்களில்



இருந்து கடத்திப் போய் விநியோகிக்கும் துறையும் அதிகம் ஆதிக்கம் பெற்றன '....ஐயா உயிரைக் காப்பாற்றுங்கள்....' என்று அதி உயரத்தில் வைத்து பார்த்த இந்த தெய்வங்களில் சிலர் '....எருமை மாட்டில் வரும் எமனாகவும் மாறி விட்டது அவலங்கள். இந்த சமூகத்தின் பிறழ்வுகள்

அறம் சார்ந்து செயற்பட்ட சமூகம் இதனை'...எமக்கு ஏன் வம்பு...' என்று தெரிந்தும் மௌமான இருந்த சூழலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சம்பவங்கள் குரல்கள் எழுந்த போது அவற்றை சமூகமாக இணைந்து ஸ்தாபன வடிவில் முன்னெடுத்துப் போராட வில்லை குரல் எழுப்பவில்லை என்பது கவனத்தில் எடுத்தாக வேண்டும்.

சில மாதங்களின் முன்பு இளம் கர்ப் பிணிப் பெண் ஒருவரின் இறப்பு அவரின் மரணத்திற்கு காரணமான மருத்துவக் குழு ஒன்றின் அசட்டையினும் அதனைத் தொடர்ந்து விசாரணை வளயத்தில் இருந்து தப்புவ தற்காக உடலைப் பெறுவதற்கு மரு த்து நிர்வாகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தம் மிரட்டல் எல்லாம் சமூக ஊடங்களில் வந்தாலும் குரல் வழி ஒலி ஒளியாக வெளிப்படுத்த ப்பட்டாலும் அதன் தொடர்ச்சியான மக்கள் எழுச்சி ஏற்படாத இடத்து அச் சம்பவம் ஒரு சிலரின் தனிப்பட்ட எதிர்பாகவே எழுந்து அடங்கியும் விட் டது.

இதனை ஒட்டி யாழ்ப்பாணத்து மருத்து வேலைகளை ஒழுங்கமைக்க உருவான சிவில் அமைப்பும் மருத்துவம் பார்க்க வரும் உறவினர்கள் இலவசமாக தங்குவதற்கு சாவகச்சேரி மசூதி மூலம் ஒழுங்குகளை செய்து தருவோம் என்ற நல்ல விடயங்களையும் நாம் கவனத்தில் எடுத்தாக வேண்டும்.

அதே போல் இலசவச மருந்து என்பதாகவும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அரச ஏன் சில கிராமத்து தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இதில் சம்மந்தப்பட்ட அரச மருத்துவமனை நிர்வாகம் தனியார் வைத்தியர்களை நாம் பாராட்ட வேண்டும் மக்களுக்கான நலன்கள் என்றாக தமது கடமைகளை ஓரளவு சிறப்பாக இந்த நிர்வாகத்திற்குள் செய்கின்றமையிற்காக

எந்த போராட்டமும் ஸ்தாபன வடிவம் பெற்று சமூகமாக எழந்து வராத வரைக்கும் அவை 'அரகலய' போல் அமெரிக்காவில் கறுப்பின பொது மகனை பொலிஸ் காரார் வீதியில் வைத்து முழங்காலால் அமத்தி மூச்சை நிறுத்து கொலை செய்வது என்றாகவும் காசாவில் தினம் தினம் கொன்றொழிக்கப்படும் குழந்கைள் பெண்கள் குழந்தைகள் என்பன இவ்வாறு தான் 'மானுடத்தினால்' மௌமான கடந்து சென்று அமுங்கி விடும்.

இதற்கு எம்மைப் போன்ற பலரும் காட்டுக் குரல் கொடுத்தாலும் தனிப்பட்ட முறையில் எமக்கு ஆதரவாக 'சரியானது தங்களின் குரல்....' என்பதாக கூறி விட்டு நமக்கு ஏன் வீணான சிக்கல் என்றாக ஒதுங்கும் சமூகப் பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயற்பாடுகளே எம் சமூகத்தில் இன்று அதிகம் மேலோங்கி இருக்கும் நிலமைகளே தற்போது வெளிப்பட்ட இந்த சீர்கேடுகளை தடுத்து நிறுத் முடியாமையிற்கான முக்கிய காரண மும் ஆகின்றன.

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைபெறும் விடயங்கள் சில தினங்களாக அங்கு நடப்பவையின் வெளிப்பாடுகள் அல்ல

மாறாக அங்கு புரையோடி இருக்கும் பிரச்சனை. இது பல மருத்துவமனைகள் கல்வி நிறுவனங்கள் திணக்களகங்கள் என்றாக பல இடங்களிலும் வியாபித்திருக்கும் விடங்களின் ஒரு சிறு துளி தான் இதனை பொதுமக்கள் சிவில் சமூகம் அறிந்திருக்கவில்லையா...? அல்லது வேறு நிர்வாகத்தில் உள்ளவர்கள் அறிந்திருக்வில்லையா....? இவை எல்லாவற்றிற்கும் மேலாக மக்களால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற தமிழ் பிரதிநிதிகள் முன்பே அறிதிருக்கவில்லையா...?

ஒரு அருச்சுனாவின் குரல் தான் அவர்களுக்கு இதனைத் தெரியப்படுத்துவ தற்கு தேவையாக இருந்ததா...?

அப்படியாயின் இந்த பாராளுமன்றப் பிரதிதிகள் என் செய்கின்றார்கள்....? இப்படியான பாராளுமன்றப் பிரிநிதிகள் எமக்குத் தேவையா...? மக்களிடம்அரசிடம் இதனை கொண்டு செல்ல வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் இதனை அறிந்திராத போல் இருப்பதுவும் தற்போது ஒரு இளம் மருந்துவர் அர்சுனா இதனை வெளிப்படுத்திய போது அதனை கையில் எடுத்து இதற்கான தீர்வை அடைவதற்கான வழி முறைகள் கையாளாது என் புகழ் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வாக்கு தேடும் அரசியலில் மட்டும் தான் இவர் களது செயற்பாடுகளா....?

தமிழ் அமைச்சர்கள் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழு என்றாக அரசியல் வாதிகள் இதற்கும் அப்பால் இலங்கை அரசின் கவனர் என்றா இவர்கள் எல்லாம் எங்கே போய் விட்டார்கள்

நாட்டைக் கொள்ளை அடித்தவர்களின் ஒரு சிலரை நாட்டை விட்டு தப்பி ஓட விட்டு பின்பு பாதுகாப்பாக திரும்பி வருவதற்கு எல்லா வகையிலும் உதவி யவரே அரசுத் தலைவராக இருக்கும் அரசில் இதற்கான நீதிகள் தீர்வுகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடி யுமா...?

யாழ் பல்கலைக் கழகத்தின் உபவேந்தரின் நிதிக் கையாடல் நிர்வாகச் சீர்கேடு என்பதாக பல வியடங்கள் ஆதாரங்களும் பல காலமாக பொதுவெளியில் சமூக வலைத் தளங்களில் பேசப்பட்டாலும் அவர்கள் சமூகத்தில் இன்று வரை பட்டையுடன் சிவபுராணம் பாடியபடி பதவியில் தொடர்வதும் இதன் ஒரு வடிவம் தான்

எங்கும் எதிலும் ஊழல் என்று மலிந்து கிடக்கும் எம்மைச் சுற்றி செயற்பாடு களில் பூனைக்கு தனியாக மணி கட்டுவதை விட்டு விட்டு சமூகமாக இணைந்து ஸ்தாபன மயப்பட்டு விழிப்புணர்வுகளை போராட்டகளை எதிர்ப்புகளை நாம் செய்தாக வேண் டும். ஒவ்வொருவரும் இவ்வாறான சமூக விரோத அறத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடும் மருத்துவர்கள் ஆசிரியர்கள் பல்கலைக் கழக வேந்தர்கள் நிர்வாகிகளை சமூகத்தில் இருந்து பொதுவெளியில் நிராகரித்து அவர்களைத் தனிமைகப்படுத்துவதே இவர்களுக்கான உடனடித் தண்டனையாக இருக்க முடியும் இதில் இருந்து ஆரம்பிப்போம்

இவர்கள் வேலை செய்யும் தனியார் மருத்துவமனைகளையும் புறக்கணிப் போம் மாறாக அவர் எம் ஊரவர் உறவினர் என்றாக மருத்துவர் விரிவுரையாளர் ஆசிரியர் எந்திரவிலாளர் என்பதாக அவருக்கு ஊருக்குள் மாலை போட்டு புராணம் பாடுவதற்கு அனுமதிக்காதீர்கள்.

வாழைக்குலை வெட்டியவனுக்கு கொள்ளைகாரப் பட்டம் (22ம் பக்கம் பார்க்க)





## கனடா – அருள்மிகு
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

**அம்பாள் அடியார்களே!**

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**





# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Glve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam BBA**

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி




## புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
## புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் வதிவிடமாகவும்
## பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த
# அமரர் திரு நடராஜா கார்த்திகேசு

காலங்கள் கடந்து பத்து ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் என்றும் நிலைத்திருப்பீர்கள்!
அன்பின் அடையாளமாக! அறத்தின் புதல்வனாக!
தர்மத்தின் தலைவனாக! அன்பில் சிவமாக!
என்றும் எங்களில் வாழும் அப்பா!
நீங்கள் இருக்கும் போது
உங்கள் அருமை தெரியவில்லை!
இல்லாத போது வெறுமை மறையாது
நீங்கள் சொன்ன வார்த்தைகள் எல்லாம்
எங்களோடு இருக்க நீங்கள் மட்டும்
போனது ஏனப்பா?
வாழ்க்கையின் வழிகாட்டியே!- உங்கள்
அன்பு முகம் தான் நிழலாடுகின்றது!
அலை கடல் வற்றினாலும் ஆகாயம் சுருங்கினாலும்
எங்கள் இதயத்தில் ஓர் மூலையில்
ஓர் குரல் மீண்டும் ஒலிக்கிறது
அனைத்து உறவுகளும் ஏதோ
ஒரு சூழ்நிலையில் கசந்து போகும்.
ஆனால் எப்போதும் கசந்து போகாத உறவு
நீங்கள் தான் அப்பா!
கோபத்திலும் அன்பைப் பொழிந்தீர்கள்!
வாழ்க்கையை கண்டிப்புடன் நடத்தினீர்கள்
அன்பு அப்பாவே! ஆண்டுகள் பத்து ஆனதப்பா
அப்பா என்று அழைக்க - நீங்கள்
இல்லாதத் துயரம் இதயத்தை வாட்டுகிறது
பாசமாய் எங்களை வளர்த்த அப்பாவே!
பார்க்கும் இடமெல்லாம்
எங்கள் பார்வைக்குள் தெரிகின்றீர்கள்
ஒவ்வொரு நொடியும் இதயத்தின்
துடிப்பைப் போல் அருகில் - நீங்கள்
வாழ்வதைப் போன்று உணருகின்றோம்
எக்கணமும் உங்கள் நினைவாக வாழும்

**என்றும் உங்களுக்காக அன்பு**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரும். வெளியூ ர் பயணங்கள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் மன நிறைவு காண்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சலுக்கு பிறகு கடினமான காரியம் கூட கைகூடும்.




ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பலரும் உங்களை தேடி வருவார்கள். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்யோகஸ்தர்களுக்கு வேலையில் முன்னேற்றம் ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் சில நேரத்தில் உங்களுக்கு எதிராகவே மாறலாம். தொழில் வியாபாரம் வேகமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள்.




கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். அதனால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள்.





சிம்மராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். மற்றவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். புதிய வீடு வாகனம் சேர்க்கை உண்டாகும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும்.




கன்னிராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். சொத்துக்களை விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. ஆடை, ஆபரணம் சேரும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். குடும்பத்தினரிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





துலாம் ராசி அன்பர்களே! மனதிடம் அதிகரிக்கும். பணவரத்து இருந்த போதிலும், எதிர் பாராத செலவும் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது. குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வீண் பேச்சுகளை தவிர்ப்பதும் நன்மை தரும்.





விருச்சிகராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி தரும். சுபச செலவுகள் அதிகமாகும். திடீர் கோபம் ஏற்பட்டு நீங்கும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை. குடும்பத்தினரது செய்கைகள் கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். கவனம் தேவை.








தனுசுராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிக்கு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலைதூர தகவல்கள் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். உத்யோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும் குடும்பத்தில் உங்கள் சொல்வன்மை அதிகரிக்கும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைப்பட்டிருந்த வாகனம் வாங்கும் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! தைரியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மிளிரும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். வாகனங்களில் செல்லும் போதும் ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. நிறைவான லாபம் வரும். தொழில் வியாபரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் சொல்படி நடப்பது நல்லது. மேலதிகாரிகள், அனுசரனையாக நடந்து கொள்வர்.




மீனராசி அன்பர்களே! எடுக்கும் காரியங்கள் வெற்றியை தரும். மற்றவர்களது உதவி கிடைக்கும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப் பூர்வமான அறிவுத் திறன் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். பேச்சாற்றலால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இழுப்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். பதவி உயர்வு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கைத் தமிழர் அரசியலில் சம்பந்தரின்

(17ம் பக்கத் தொடர்ச்சி) அதே விமானத்தில் சேர்ந்து பயணம் செய்வது மாத்திரமே அவரைச் சந்தித்து பேசுவதற்கான ஒரே வழி என்று பிரதமர் அலுவலகம் சம்பந்தனுக்கு அறிவித்தது.

மூன்று தமிழ் தலைவர்களும் இரவோடிரவாக சென்னையில் இருந்து திருச்சிக்கு ரயிலில் சென்று அங்கிருந்து பிரதமரின் விமானத்தில் பயணம் செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.

கையில் ஒரு வரைபடத்தை வைத்துக்கொண்டு ராஜீவ் காந்தியுடன் பேசிய சம்பந்தன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான மொழிரீதியான நிலத் தொடர்ச்சி குறித்து தெளிவாக விளக்கமளித்தார். டில்லியில் விமானத்தில் இருந்து இறங்கியபோது பிரதமருடன் கைகுலுக்கி விடை பெற்ற சம்பந்தன் நான் கூறியவை எல்லாம் முழுவதும் உண்மை என்று கூறினார்.

சில மாதங்களுக்கு பிறகு இலங்கை ஜனாதிபதியுடன் ராஜீவ்காந்தி கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு முக்கியமான ஏற்பாடாக உள்ளடக்கப்பட்டது. இந்திய பிரதமருடன் சேர்ந்து விமானத்தில் பயணம் செய்தது குறித்து பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திய சம்பந்தன் வடக்கு, கிழக்கு இணைப்பு ஆகாயத்தில் உறுதிப்படுத்தப்பட்டது என்று நகைச்சுவையாகக் கூறினார். இவ்வாறு மீரா ஸ்ரீனிவாசன் எழுதியிருக்கிறார்.

சம்பந்தன் இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த இரண்டாவது தமிழ் தலைவராவார். முதலில் அமிர்தலிங்கம் 1977ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரையும் பிறகு சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையும் அந்த பதவியை வகித்தனர். அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த காலப்பகுதிக்கு பிறகு உள்நாட்டுப் போர் மூண்டது. அதே உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னரான காலப்பகுதியில் சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு வந்தார். ஒரு எதிர்க்கட்சி தலைவராக இல்லாமல் சிறிசேன ரணில் அரசாங்கத்தை ஆதரிக்கும் ஒருவராகவே சம்பந்தன் நடந்து கொண்டார் என்று விமர்சனங்கள் எழுந்தன.

அந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை வரையும் செயன்முறையை முன்னெடுத்ததால் அதில் ஒத்துழைத்து தேசிய இனப்பிரச்சினைக்கு உச்சபட்ச அதிகாரப் பரவலாக்கம் மூலமாக அரசியல் தீர்வொன்றைக் காணலாம் என்ற நம்பிக்கையில் சம்பந்தன் அவ்வாறு நடந்து கொண்டிருக்கக் கூடும். ஆனால் இறுதியில் அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முன்னைய தமிழ்த் தலைவர்களுக்கு நேர்ந்த அனுபவமே சம்பந்தனுக்கும் ஏற்பட்டது. அவரது தலைமைத்துவம் நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு சிங்கள தலைவர்களுக்கு சிறந்த வாய்ப்பை வழங்கியது என்று நம்பியவர்கள் பலர்.

இது இவ்வாறிருக்க, தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமையாக வைத்திருக்க சம்பந்தன் தவறி விட்டார் என்பதே தமிழர் அரசியல் அவரின் தலைமைத்துவத்தின் கீழ் இருந்த கடந்த இரு தசாப்தங்களில் அவரின் செயற்பாடுகள் குறித்து முன்வைக்கப்படும் முக்கியமான விமர்சனமாகும்.

போர் முடிவுக்கு வந்த பிறகு தமிழ் மக்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயம் ஒன்று இருக்கவில்லை. அடுத்து வந்த சகல தேர்தல்களிலும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை தவிர வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு வேறு அரசியல் மார்க்கம் இருக்கவில்லை.

தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளுக்கு இசைவான முறையில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டிய வரலாற்று பொறுப்பைக் கொண்டிருந்த கூட்டமைப்பு சம்பந்தனின் முன்னாலேயே சீர்குலைந்தது. அவரால் குறைந்த பட்சம் தனது இலங்கை தமிழரசு கட்சியையேனும் ஐக்கியமான ஒரு அரசியல் சக்தியாக வைத்திருக்கவும் முடியாமல் போய்விட்டது.

இன்று தமிழர் அரசியல் சமுதாயம் சிதறுண்டு கிடக்கிறது. பல கட்சிகள், பல தலைவர்கள். முன்னென்றும் இல்லாத வகையில் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை அவசியமாக இருக்கின்ற ஒரு நேரத்தில் அவர்கள் இயன்றவரை பிரிந்து நின்று செயற்படுவதிலேயே முனைப்புக் காட்டுகிறார்கள். இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமை குறித்து சம்பந்தன் கவலையடைந்த ஒரு மனிதனாகவே இறுதி மூச்சை விட்டிருக்கக்கூடும்.

# சாவகச்சேரி மக்கள் போராட்டம் ஒரு அறச் சீற்றம்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) சூட்டி கம்பத்தில் கட்டி தண்டனை வழங்கியதை கொண்டாடிய சமூகம் அதனை சுய விமர்சனப் பார்வையில் பார்த்து இந்த மனித உயிர்களுடன் எதிர்கால சந்ததியின் கல்வியில் விளையாடும் கொள்கை காரர்களை சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்துவதன் மூலதம் தண்டனையை ஆரம்பிப்போம்

அன்றேல் அர்சுனாக்களின் குரல்கள் கால ஓட்டத்தில் சேடம் இழுந்து ஒரு மேற்கத்திய நாட்டின் முன்னேற்றத்திற்காக. இந்த இலங்கையில் யாழ் இந்துவில் பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வி ஏலவே சென்ற பலரை போல இதுவும் எதிர் காலத்தில் ஆகி விடும் அபாயம் உண்டு என்பதை நாம் எச்சரிக்கையாக பார்ப்போம்

இறுதியாக இந்த சமூகத்தில் இந்த எல்லா இலவசங்களையும் உரிமையாக பெற்று அங்கேயே தங்கி நின்று சிறந்த மருத்துவர்களாக ஆசிரியர்களாக எந்திரவியலாளர்களாக விரிவுரையாளர் களா இன்ன பிற சேவையாளர்களாக சேவை ஆற்றும் சமூகப் பொறுப்புள்ள அறம் சார்ந்து செயற்படும் பலரையும் நாம் வாழ்த்தி வணங்கியும் அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்தும் நிற்கின்றோம்

ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் கடற்படை முகாம் தாக்குதலில் காயம் அடைந்தவர்களை களத்தில் நின்று மருத்து உதவி செய்த மருத்துவர் பொன்னம்பலங்களையும் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லீம் மக்களுக்கு புத்தளத்தில் மருத்துவராக செயலாற்றிய ரஞ்சனிகளையும் இறுதி யுத்தத்தில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் தமது உயிரையும் அர்பணிக்கத தயார் நிலையில் நின்று பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்த பல பத்து மருத்துவர்களையும் சத்தியமூர்த்திகளையும் நாம் இவ்விடத்தில் நினைவில் கொண்டு வருவதை தவிர்க்க முடியவில்லை இப்படியானவர்களை நாம் சமூகத்தில் அதிகம் அடையாளப்படுத்தி முன் உதாரணங்களாக கொள்வோம்

நன்றி:- சிவா முருகுப்பிள்ளை முகநூல்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE HIGHER STANDARDS
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




காப்புறுதி ஒன்றே!
Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
Super Visa Insurance
RESP, RRSP and TFSA
Arun
KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS




BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit
தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com




July
20
CANADA EVENT CENTRE
300 WATER ST,
WHITBY, ON
L1N 9B6
AT: 6:00 PM
SATURDAY
VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
MANO
LIVE IN
TORONTO
GLOBAL
FINANCIAL SERVICES
ACCOUNTING & IMMIGRATION SERVICES
RAVI PONNUSAMY
Financial Broker
Rajaganapathy
vijay TV
Super Singer
Anu Anand
vijay TV
Super Singer
Muthuchippi
Shruthi
vijay TV
Super Singer
THUSHE NAVARATNARAJAH
416.357.4475
RE/MAX Crossroads
ABI SRICHANDRADAS
Dir: 647.973.9006
ignite
YASI RAVICHANDRAN
647.273.8121
ignite
ஈழநாடு
தொடர்புகளுக்கு: 437-234-8040 | 647-856-1191




வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE FOR YOU &
YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4